Not for sale

ஜூலை - ஆகஸ்டு 2013

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## மாற்கின் சுவிசேஷம்

மாற்கின் சுவிசேஷம் • மாற்கு சுவிசேஷத்தில் உள்ள அற்புதங்கள்

அவர் யாருடைய குமாரன் ? • இயேசுவின் கலிலேய ஊழியம்

கிறிஸ்துவின் இறுதி வாரம் • மாற்கு 16 : 9-20 வசனங்களுக்கான ஆதாரம்

ஜான் மாற்கு

மாற்கின் சுவிசேஷம்

# ஆதியிலே



"உங்களுடனேகூடத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற பாபிலோனிலுள்ள சபையும், என் குமாரனாகிய மாற்கும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்." (1 பேது. 5:13)

மாற்கு சுவிசேஷத்தை எழுதின ஆசிரியரைக் குறித்து நமக்கு என்ன தெரியும்? அதிகமாக, மாற்கை பற்றி வெகு சில காரியங்களே வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

அப். பேதுரு, அவரைப் பற்றி குறிப்பிடுகையில் தம்முடைய குமாரனைப் போல மிக நெருக்கமானவர் என்று கூறுகிறார். சிறையிலிருந்து தேவனுடைய தூதனால் அப். பேதுரு விடுவிக்கப்பட்ட போது, அவர் ஜான் மாற்கின் தாயின் வீட்டிற்கு முதலில் சென்றதாக அப்போஸ்தலர்களின் புஸ்தகம் நமக்கு கூறுகின்றது. பேதுரு அவ்வீட்டின் முன் தட்டும் போது, ஜான் மாற்கு ஒரு இளைஞனாக இருந்திருக்கக்கூடும். அன்று நடந்த அற்புதமானது, மாற்கின் இருதயத்தில் வல்லமையான பதிவை விட்டு சென்றிருக்க வேண்டும். ஒருவேளை வருங்கால ஊழிய வேலைகளை ஒருமித்து செய்வதற்கு இத்தருணமே திறவு கோலாக அமைந்திருக்கலாம்.

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் உள்ள மிக முக்கியமானதும், அருமையான காரியங்களையும் ஆழ்ந்து நோக்குவதற்கு இந்த ஹெரால்டு பிரதி பயனள்ளதாய் இருக்கிறது. (மாற். 1: 1) அதில் விடுபட்ட சில பகுதிகளை நிறைவு செய்வதற்கு, சில வரலாற்று உண்மை நமக்கு உதவுகிறது. இந்த பிரதியில் உள்ள கட்டுரைகள் ஜான் மாற்கு எழுதின வார்த்தைகளை மையப்படுத்தும்.

"மாற்கின் சுவிசேஷம்" என்ற தலைப்பு ஜான் மாற்கின் தனித்துவமான குணங்களை கருத்தில் கொண்டிருக்கிறது. அவர் பயன்படுத்தின அராமிக் வார்த்தைகள் மற்றும் மேசியாவைக் குறித்த இரகசியங்கள், அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. "மாற்கு சுவிசேஷத்தில் உள்ள அற்புதங்கள்" என்ற தலைப்பு அந்த சுவிசேஷத்தின் மூலத்தைப் பற்றியும், இயேசுவே மேசியா என்பதற்கான நிரூபணங்களை இந்த அற்புதங்களின் வழியாக எவ்வாறு நிரூபிக்கப்பட்டது என்ற ஒரு ஆழமான கண்ணோக்கத்தையும் கொடுக்கிறது.

"அவர் யாருடைய குமாரன்" என்ற கட்டுரை, இயேசு தேவனுடைய குமாரனா அல்லது மனுஷகுமாரனா என்ற கேள்விக்கு பதிலளிக்கிறது. "இயேசுவின் கலிலேயா ஊழியம்" என்ற தலைப்பு இயேசுவின் ஊழியத்தின் துவக்கத்தில் கலிலேயா பகுதியில் அவர் கற்பித்த அருமையான பாடங்கள் விவரிக்கப்படுகிறது. அதின் தரம், ஜனங்களின் தன்மை மற்றும் இயேசுவின் ஊழியத்தையும், கிரியைகளையும் செய்வதற்கான அருமையான சூழ்நிலையைக் காட்டுகிறது.

"கிறிஸ்துவின் இறுதி வாரம்" என்ற தலைப்பு, மாற்கின் சுவிசேஷத்தில் கடைசி ஐந்து அதிகாரங்களை முழுமையாக கண்ணோக்குகிறது. இயேசு எருசலேமுக்கு திரும்பி வந்து, அவருடைய எதிராளிகளோடு எதிர்த்த விதங்கள் மற்றும் சீஷர்களின் இருதயத்தில் இராஜ்யத்தைக் குறித்த பாடங்களை மனதில் பதியவைப்பதற்காக அவர் எடுத்த முயற்சிகள் காணப்படுகிறது. "மாற். 16:9-20 வசனங்களுக்கான ஆதாரம்" என்ற தலைப்பு மாற்கு சுவிசேஷத்தின் இறுதியில் சேர்த்து எழுதப்பட்ட வார்த்தைகளின் விவரங்களைக் குறித்து விளக்குகிறது. "ஜான் மாற்கு" என்ற தலைப்பு இந்த சுவிசேஷத்தை எழுதின அற்புதமான எழுத்தாளரை எண்ணிப்பார்க்கிறது.

அப்போஸ்தலனாகிய பேதுருவின் நினைவுகளை நமக்குத் தரக்கூடிய ஜான் மாற்கின் சாட்சியங்கள் வாசகர்களுக்கு மிக ஆசீர்வாதமாக இருக்கும் என்று நம்புகிறோம்.

ஜுலை-ஆகஸ்ட் 2013


**மாற்கின் சுவிசேஷம்** 45

புதிதான நடையில் ஒரு சுருக்கமான சுவிசேஷம்

**மாற்கு சுவிசேஷத்தில் உள்ள அற்புதங்கள்** 50

இயேசுவின் அற்புதங்கள்

**அவர் யாருடைய குமாரன்?** 55

குழப்பமான கேள்வி

**இயேசுவின் கலிலேய ஊழியம்** 59

ஒரு செழிப்பான ஊழியம்

**கிறிஸ்துவின் இறுதி வாரம்** 69

இறுதி அனுபவங்கள்

**மாற்கு 16:9–20 வசனங்களுக்கான ஆதாரம்** 74

கேள்விக்குரியான ஒரு பகுதி

**ஜான் மாற்கு** 75

அந்த சுவிசேஷத்தின் ஆசிரியர்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 76

புதிதான நடையில் ஒரு சுருக்கமான சுவிசேஷம்

# மாற்கின் சுவிசேஷம்



"தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்." (மாற். 1: 1)

**Michael Nekora**

மேற்கூறப்பட்ட சில வார்த்தைகள் மாற்கு எழுதின சுவிசேஷத்தை அறிமுகப்படுத்துகிறது. மேலும் இதுவே இந்த புத்தகத்தின் மூலத் தலைப்பாக இருந்திருக்க வேண்டும். இயேசு எந்த புத்தகத்தையும் எழுதவில்லை, அவருடைய சீஷர்களை எழுத சொல்லவும் இல்லை, அவர்களை சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி கேட்டுக்கொண்டார், (மாற். 16:15) அவர்கள் யூதேயாவில் மட்டுமல்ல, ரோமாபுரி பட்டணம் போல வெகு தூரமான பட்டணங்களுக்கும் சென்று பிரசங்கித்தார்கள். இயேசுவின் ஊழியத்தின்போது, அவருடைய சீஷர்கள் தங்களுடைய வாழ்நாட்களில் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்று எதிர்பார்த்தனர். மகிமையான இராஜ்யத்தில் தங்களுடைய தலைவரின் அருகாமையில் அமருவதற்கு யாக்கோபும், யோவானும் கேட்டுக் கொண்டனர். (மாற். 10:37) ஆகவே சந்தேகத்திற்கு இடமின்றி வெகு சீக்கிரம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இயேசு மரித்து உயிர்த்தெழுந்த பின், "அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்" (அப். 1:6) என்ற கேள்வியே அப்போஸ்தலரால் முதலில் கேட்கப்பட்டது.

இப்படியாக, சில பேரில்லாத தனி நபர்கள், நம்முடைய ஆண்டவரின் அனுபவங்களைக் குறித்து எழுதுவதற்கு முடிவு செய்தனர். மாற்கு எழுதின சுவிசேஷம் மற்ற நான்கு சுவிசேஷங்களைக் காட்டிலும் மிகச் சிறியது. மேலும் வரலாற்று புத்தகத்தில் அதின் ஆசிரியரின் பெயர் காணப்படவில்லை, அந்த புத்தகத்தில் ஆசிரியரின் பெயர் காணப்படாவிட்டாலும், ஆதி கிறிஸ்தவ சபை தலைவர்கள் அப்புத்தகத்தை மாற்கு எழுதியிருக்க வேண்டும் என்று முடிவு செய்தனர். (இவரின் குடும்ப பெயர் யோவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது - அப். 12:12, 25; 15:37)

இயேசுவோடு தொடர்பு கொண்டிருப்பதற்கு மாற்கு என்பவர் மிக இளைஞராக இருந்திருக்க வேண்டும். பவுல், தீமோத்தேயுவை தன்னுடைய குமாரனாக தத்தெடுத்தது போல, (1 தீமோ. 1:2) காலப்போக்கில் மாற்கு பேதுருவினால் தத்தெடுக்கப்பட்ட குமாரனானார். (1 பேது. 5:13) பேதுரு மாற்கிடம் எல்லாவற்றையும் கூறியிருக்க வேண்டும். அவர் கூறின ஒவ்வொரு வார்த்தையையும் மாற்கு, தன்னுடைய இருதயத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். பதிவேடும் புத்தகங்களும் அக்காலத்தில் அரிதாக இருந்ததினால் ஞாபகத்தில் வைப்பதே வழக்கமாய் இருந்தது. மத்தேயு சுவிசேஷம் முதலில் எழுதப்பட்டது என்று பொதுவாக நம்பப்படுகிறது - ஒரு அப்போஸ்தலனாகவும் நடந்த காரியங்களுக்கு கண்கண்ட சாட்சியாகவும், அவருடைய பதிவுகள் நிரூபிக்கிறது. பேதுரு கூறின காரியங்களை எழுதின மாற்கு தன்னுடைய சொந்த நினைவுகளிலிருந்தவற்றை அல்ல, பேதுரு கண்ட காரியங்களை எழுதினார். மத்தேயுவின் சுவிசேஷத்தை மாற்கு படித்தறிந்து, அதைக்காட்டிலும் வாசகர்களின் விரிவான புரிந்து கொள்ளுதலுக்கு ஏற்ப தெளிவாக எழுதியிருக்க வேண்டும். மத்தேயு மற்றும் மாற்கின் பதிவுகளில் உள்ள நெருக்கங்களை இது விவரிக்கும். லூக்கா மற்றும் யோவான் எழுதின சுவிசேஷங்கள் சற்று வித்தியாசமாகவே இருந்தது.

மற்ற சீஷர்களைக் காட்டிலும் மாற்கு எழுதின சுவிசேஷத்தை பேதுரு அதிகமாக குறிப்பிடப்படவில்லை என்பது நமக்கு ஆர்வமூட்டக்கூடியதாய் இருக்கிறது. இயேசு தண்ணீரின் மேல் நடந்து வந்த அற்புதத்தை மாற்கு குறிப்பிட்டிருந்த போதும், அவர் பேதுருவை பற்றி ஒன்றும் கூறவில்லை. (மத். 14:28-31)

வரிப்பணத்தை செலுத்துவதற்கு பேதுரு தன்னுடைய மீன்பிடிக்கும் திறனைப் பயன்படுத்தின விதமும், மாற்கு சுவிசேஷத்தில் தவிர்க்கப்பட்டது. (மத். 17:24-27) இயேசு உண்மையில் யார் என்பதை தெளிவாகக் கண்டுபிடித்த பேதுருவுக்கு, இயேசுவால் கொடுக்கப்பட்ட விசேஷித்த ஆசீர்வாதமும், மாற்கு சுவிசேஷத்தில் குறிப்பிடப்படவில்லை.(மத். 16:17-19) ஆகவே, மாற்கு எழுதின சுவிசேஷம், பேதுருவினால் குறிப்பிடப்பட்டது என்ற கருத்தை, மேற்கூறப்பட்ட இந்த ஆதாரங்கள் ஆதரவு தெரிவிக்கின்றது. தன்னுடையதை அல்ல, தேவனுக்கே மகிமை சேர்க்கும் அப்போஸ்தலருடைய தாழ்மையுள்ள இருதயத்தை இது பிரதிபலிக்கிறது.

மாற்கு எழுதின சுவிசேஷத்தின் கச்சிதமான சுருக்கத்தை இயேசுவை பற்றி கொர்நெலியுவிடம் பேதுரு பேசின வார்த்தைகள் அப்போஸ்தலர் புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவைக்கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே. யோவான் ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கித்தபின்பு, கலிலேயாநாடு முதற்கொண்டு யூதேயா தேசமெங்கும் நடந்த சங்கதி இதுவே. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்" (அப். 10:36-42) என்று பேதுரு கூறினார்.

**பார்வையாளர்கள்**

ஆதியில் மத்தேயு எழுதின சுவிசேஷத்தைப் போல் இல்லாமல், விசுவாசிக்கும் புறஜாதி பார்வையாளர்களுக்கும் தெளிவாகப் புரியும்படி, மாற்கு தன்னுடைய சுவிசேஷத்தை எழுத விரும்பினார். மத்தேயுவை பொருத்த வரையில், இயேசுவை தங்களுடைய மேசியா என்று நம்பின யூத பார்வையாளர்களை இலக்காக வைத்து, குறிப்புகளை எழுதினார். பத்து முறைகளுக்கு மேலாக பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களில் இயேசுவை குறித்த நிறைவேற்றங்களை மத்தேயு எழுதியிருக்கிறார். ஆனால் ஒருமுறை மட்டுமே மாற்கு குறிப்பிட்டுள்ளார். இயேசு அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார் என்று (ஏசா. 53:12-ம் வசனத்தில் எழுதப்பட்டதை, மாற். 15:28-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார்.)

மோசேயின் நியாயப்பிரமாணம் குறித்து, மாற்கு எங்கும் குறிப்பிடவில்லை. மேலும், நியாயப்பிரமாணம் என்ற வார்த்தையே அவருடைய சுவிசேஷத்தில் எங்கும் காணப்படுவதில்லை. அவர் அராமிக் வார்த்தைகளை கிரேக்க வார்த்தைகளாக மொழிபெயர்த்து, மற்ற எந்த யூதர்களும் அறிந்திருக்கும் காரியங்களை மிகத் தெளிவாக விவரித்துள்ளார். இதற்கான சில எடுத்து காட்டுகளைக் காணலாம் -

**புறஜாதி பார்வையாளர்களுக்குரிய விளக்கங்கள்**

"யாக்கோபு, யாக்கோபின் சகோதரனாகிய யோவான், ... இடிமுழக்கமக்களென்று...பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார்." (மாற். 3:17)

"பிள்ளையின் கையைப் பிடித்து: தலீத்தாகூமி என்றார்; அதற்கு, சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று அர்த்தமாம்." (மாற். 5:41)

"ஒருவன்...அதைக் கொர்பான் என்னும் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டால்." (மாற். 7:11)

"அப்பா பிதாவே,...என்றார்." (மாற். 14:36)

"ஒன்பதாம்மணி நேரத்திலே, இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி,- என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்." (மாற். 15:34)

"ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசு...." (மாற். 12:42)

"யூதர் அனைவரும்...அடிக்கடி கைகழுவினா லொழியச் சாப்பிடமாட்டார்கள்." (மாற். 7:3)

"அவர் தேவாலயத்துக்கு எதிராக ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில்...." (மாற். 13:3)

"உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயர் அவரிடத்தில் வந்து:" (மாற். 12:18)

மாற். 1:2, 3 வசனங்களில், மல். 3:1 மற்றும் ஏசா. 40:3 வசனங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. அதற்கு பின் மாற்கு எந்த இடத்திலும் பழைய ஏற்பாட்டின் வசனங்களைக் குறிப்பிடவில்லை. (மாற். 15:28 சேர்க்கப்பட்ட வசனங்கள் ஆகும்.)

"என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்" (ஏசா. 56:7) என்ற ஏசாயாவின் வார்த்தைகளை ஆலயத்தை சுத்திகரிக்கும் போது இயேசு கூறினார். ஆனால், மாற்கு அதை எழுதும் போது, சற்று மாற்றினார், "என்னுடைய வீடு எல்லா ஜனங்களாலும் ஜெபவீடு என்னப்படும்." (மாற். 11:17) - மத். 21:13 மற்றும் லூக். 19:46 வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும். இப்படிப்பட்ட வலியுறுத்தல் விசேஷமாக புறஜாதி விசுவாசிகளை அதிகமாக ஊக்குவித்திருக்க வேண்டும்.

மத்தேயு மற்றும் மாற்கு எழுதின வரிசையில் காணப்படும் ஒற்றுமைகள் குறிப்பிடத்தக்கதாய் இருக்கின்றது. ஆயினும், இயேசுவை மேசியாவாக மத்தேயு முன் வைத்து, இராஜரீகமான இந்த எண்ணத்திற்கு ஆதரவாக அநேக சம்பவங்களை விவரித்துள்ளார். அதே நேரத்தில் மாற்கு இயேசுவை அதற்கு எதிரிடையான கோணத்தில் சித்தரிக்கிறார் - பாடுபடும் ஒரு ஊழியக்காரன் தம்முடைய சீஷர்கள், ஊழியக்காரர்களாக இருக்க வேண்டும் என்று இயேசு கூறினதை விவரிக்கிறார். "உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்." (மாற். 10:43-45)

மாற்கில் காணப்படும் பல காரியங்கள் மற்ற சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டுள்ளது. ஆனால், இரண்டு அற்புதங்கள் மட்டுமே மாற்கில் தனித்துவமாகக் காணப்படுகிறது. இயேசு, தெக்கப்போலி பகுதியை கடந்து செல்லும்போது, காது கேளாத ஒரு ஊமையனை சொஸ்தப்படுத்தினார். (மாற். 7:31-35) மற்றொரு தருணத்தில் பெத்சாயிதாவிலுள்ள ஒரு குருடனுக்குப் பார்வையளித்தார். (மாற். 8:22-26) எதிர்பாராத அந்த தருணத்திலும் இரண்டு வியாதியஸ்தர்களை வெற்றிகரமாக சொஸ்தப்படுத்தினார். இவர் பர்திமேயு என்று மாற்கு கூறுகின்றார். (இதற்கு திமேயுவின் குமாரன் என்று பொருள் - மாற். 10:46) இவர் எரிகோவில் சுகம் பெற்றவர். அந்நேரத்தில் இரண்டு குருடர்களை இயேசு சொஸ்தமாக்கினார் என்று மத்தேயு கூறுகின்றார். ஆனால், அவர்களுடைய பெயரை அவர் குறிப்பிடவில்லை. (மத். 20:30)

அவர், தம்முடைய வீட்டைவிட்டு நீண்ட காலமாக பயணம் சென்ற ஒரு எஜமான் தன்னுடையவைகளை ஒரு காவல்காரனிடம் ஒப்புவித்து சென்ற ஒரு உவமையை இயேசுவின் கற்பனையோடு ஒப்பிடுகிறார். (மாற். 13:33-37)

ஒரு நல்ல ஊழியக்காரனாக இயேசு வெகு சீக்கரத்தில் காரியங்களைச் செய்கிறார். "உடனடியாக" "வெகு சீக்கிரம்" என்று பொருள் கூறும் கிரேக்க வார்த்தையை மாற்கு சுமார் 40 முறைகள் பயன்படுத்துகிறார்!

இயேசுவின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை பேதுருவோடு பகிர்ந்து கொண்ட செய்திகளை அடிப்படையாகக் கொண்டு மாற்கு தன்னுடைய சுவிசேஷத்தை எழுதினார். விதவிதமான கோணங்களில் மாற்கு பலதரப்பட்ட புறஜாதி விசுவாசிகளுக்கு சுவிசேஷம் எழுதினதை தெளிவாக நாம் காணலாம். இயேசுவை தங்களுடைய சொந்த வாழ்க்கையில் ஒப்பிட்டு பார்ப்பதற்கு உதவியாக அவருடைய வார்த்தைகள் எப்பொழுதும் விவரித்தது. "புனித மாற்கு சுவிசேஷம்" (Saint Mark Gospel) என்று தலைப்பிடப்பட்ட புத்தகத்தை (மாற்கு எழுதின சுவிசேஷம்) ஒரு நவீன நாடகமாக அரங்கேற்றப்பட்டது. சில ஆதாரங்களைப் பயன்படுத்தி மாற்கு தன்னுடைய நினைவுகளில் பதிவு செய்திருந்த இயேசுவை பற்றிய சரித்திரத்தை இரண்டு மணி நேரத்திற்குள் Alec mcCowen என்பவர் மிக எளிமையாக விவரித்தார். அவருடைய அரங்கேற்றம் 1999-ம் வருஷம் Tony Award என்ற பரிசை வென்றது.

**புரிந்து கொள்ள இயலாத இளைஞன்**

"ஒரு வாலிபன் ஒரு துப்பட்டியை மாத்திரம் தன்மேல் போர்த்துக்கொண்டு அவர் பின்னே போனான்; அவனைப் பிடித்தார்கள். அவன் தன் துப்பட்டியைப் போட்டு விட்டு, நிர்வாணமாய் அவர்களை விட்டு ஓடிப்போனான்." (மாற். 14:51, 52) கெத்செமனேயில் காணப்பட்ட இந்த இளைஞனைக் குறித்து, வேறு எந்த விவரங்களும் நமக்கு தெரியாது.

பன்னிரண்டு சீஷர்களில் அவர் ஒருவராக இருந்திருக்க நிச்சயமாக வாய்ப்பில்லை - ஏனெனில், "அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" (மாற். 14:50) என்று வசனம் கூறுகின்றது. இயேசு இராப்போஜனத்தைப் புசித்த இடத்திலிருந்த இந்த இளைஞன் பின் தொடர்ந்தார் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், இதுவும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு காரியமாகும். ஏனெனில், எருசலேமில் அப்பொழுது மிகுதியான குளிர்காலமாய் இருந்தது. எவ்வளவு அவசரமானாலும் சரி, ஒரு மனுஷன் தன்னுடைய வீட்டிலிருந்து தான்

அணிந்திருந்த துப்பட்டியோடே பட்டணத்திற்குள் செல்வதற்கு வாய்ப்பில்லை.

கெத்செமனே தோட்டத்திற்கு அருகாமையில் இருந்த வீட்டில் நித்திரை செய்து கொண்டிருந்த இளைஞன். இரைச்சலான கூட்டத்தின் சத்தத்தைக் கேட்டு உடனடியாக அங்கு நடப்பதைக் காண வந்திருக்க வேண்டும் என்று மற்ற சிலர் கூறுகின்றனர்.

அவர் லாசருவாக இருந்திருக்கக் கூடும் என்று சிலர் கருதுகின்றனர். யூத மத தலைவர்கள் இயேசுவை மட்டுமல்ல, லாசருவையும் கொல்ல வகைதேடினார்கள். (யோவா. 12:10) இயேசுவை பிடிக்க வந்த யூதர்கள், லாசருவை கண்டிருந்தால் அவரையும் பிடித்துச் சென்றிருப்பார்கள். ஆனால் யூதாஸ் முத்தமிட்டு இயேசுவை காட்டிக்கொடுக்கும் வரையில் வந்தவர்கள் இயேசுவை அறியவில்லை. இப்படியிருக்க. இயேசுவை அடையாளம் கண்டுபிடிக்காதவர்கள் நிச்சயமாக லாசருவையும் அடையாளம் கண்டுபிடித்திருக்க முடியாது. மேலும் எருசலேமுக்கு தொலை தூரத்திலுள்ள பெத்தானியாவில் லாசரு குடியிருந்தார். இயேசு தம்முடைய கடைசி வாரத்தின் ஒவ்வொரு இராத்திரியும் பெத்தானியாவுக்குத் திரும்பினார்.

ஆகவே. இந்த இளைஞன் மாற்காக இருக்க வேண்டும் என்று பலருடைய கருத்து ஒருமித்து கூறுகிறது. யோவான் தன்னுடைய சுவிசேஷத்தில் தன்னை ஒரு மூன்றாவது நபரைப்போல குறிப்பிடுவதற்கு ஒப்பாக (யோவா 19:26) ஆண்டவரோடு கூட மரிக்க வேண்டும் என்று புரிந்திருந்த சீஷர்கள் அனைவரும் அவரை விட்டு விரைந்தோடும் தருணத்தில் அங்கு அவர் இருந்ததாக தன்னை ஒரு மூன்றாவது நபராக அறிமுகப்படுத்திக்கொள்கிறார். வஸ்திரமில்லாமல் விரைந்தோடும் காரியம். யூதர்களுக்கு ஒரு சங்கடமான அல்லது அவமானமான ஒரு காரியமாக இருப்பினும். மாற்கு தன்னை குறித்த இந்த விவரத்தை மறைக்காமல் பதிவு செய்திருக்கிறார். ஆகவே. மாற்கு விவரித்த எல்லா சம்பவங்களும் உண்மையில் நடைபெற்றது என்று நம்பப்பட்டது. அவர் ஒரு உண்மையான வரலாற்று சம்பவங்களை எழுதினார். மற்ற இந்த சுவிசேஷத்திலும் இந்த இளைஞனைப் பற்றி எங்கும் குறிப்பிடப்படவில்லை.

**மேசியாவின் இரகசியம்**

மாற்கு சுவிசேஷத்திலுள்ள முதல் ஒன்பது அதிகாரங்கள். கலிலேயாவில் நடைபெற்ற இயேசுவின் ஊழியத்தை விவரிக்கிறது. கடைசி ஆறு அதிகாரங்கள். இயேசுவின் சிலுவை மரணத்தில் முடியும் கடைசி வாரத்தை விவரிக்கிறது. பொதுவாக இயேசுவே உண்மையான மேசியா என்பதை அங்குள்ள ஜனக்கூட்டம் அல்லது அவருடைய சொந்த சீஷர்களும் கூட அடையாளம் கண்டுபிடிக்கவில்லை. வருகின்ற மேசியா இவர்தானா என்று விசாரிக்கும்படி யோவான்ஸ்நானனும் இரண்டு மனுஷரை அனுப்பினார். ஆயினும் அவர் விரட்டின அசுத்த ஆவிகள் அவர்தான் மேசியா என்பதை நிச்சயமாக அறிந்திருந்தது. (மாற். 1:24, 34; 3:11, 12) அவர் ஒருவரிடமும் இதை வெளிப்படுத்த வேண்டாம் என்று கூறியிருந்தார். அவருடைய ஊழியத்தின் முடிவில் இயேசுதான் மேசியா என்பதை மிக துல்லியமாக பேதுரு கண்டுபிடித்தார். (மாற். 8:30) மேலும், இக்காரியம் இரகசியமாக வைத்திருக்கும்படி பேதுருவிடமும் கூறப்பட்டது. மரித்துப்போன ஆலய தலைவனின் குமாரத்தியை. இயேசு உயிர்த்தெழுப்பிய பின், இந்த அற்புதத்தை ஒருவரிடமும் கூற வேண்டாம் என்று இயேசு அறிவித்தார். (மாற். 5:43)

இயேசுவின் வார்த்தைகளின் ஆழமான பொருளை அங்கிருந்த ஜனக்கூட்டமும் புரிந்துகொள்ளவில்லை. நான்காம் அதிகாரத்தின் துவக்கத்தில், கரையிலிருந்த திரளான கூட்டத்திற்கு இயேசு படகில் அமர்ந்தவாரு பிரசங்கித்தார். அப்பொழுது அவர் பயன்படுத்தின உவமைகளை அந்த ஜனக்கூட்டத்தாராலும். சீஷர்களாலும்கூட புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே. சீஷர்கள் அவரிடம் தனித்து வந்து, "அவர் தனித்திருக்கிறபோது, பன்னிருவரோடுங்கூட



அவரைச் சூழ்ந்திருந்தவர்கள் இந்த உவமையைக் குறித்து அவரிடத்தில் கேட்டார்கள். அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர் களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது என்றார்" (மாற். 4:10-12).

அதை புரிந்துகொள்வதற்கு சீஷர்களுக்கு கடினமாக இருந்திருக்கும். அதைபோல, இன்றைய நாளிலும் ஒருவர் தேவனிடம் சேராவிட்டால், அவர் நிச்சயமாக உபத்திரவப்பட வேண்டும் என்று பல கிறிஸ்தவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இயேசு இந்த உலகத்தை மாற்ற வரவில்லை. அவர் ஊழியம் செய்யவும், பாடுபடவும், மரித்த அனைவருக்கும் தம்மை ஈடுபலியாக செலுத்தவும் வந்தார். (1 தீமோ. 2:6) மேசியா பாடுபட்டு மரிப்பதா? ஆம், - "அல்லாமலும், மனுஷகுமாரன் பல பாடுகள்பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொலலப்பட்டு, மூன்றுநாளைக்குப்பின்பு உயிர்த்தெழுந்திருக்கவேண்டியதென்று அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்." (மாற். 8:31)

பல அற்புதங்களை செய்ததினால் இயேசுவை மேசியா என்று பலர் நம்பியிருக்கலாம். ஆனாலும், யூத தலைவர்களின் எண்ணங்களை மாற்றுவதற்கு அது போதாதிருந்தது. இவர்களுக்கு விதிவிலக்கானவர் நிக்கொதேமு. " ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்." (யோவா. 3:2) இயேசுவை ஒரு அற்புதம் நிகழ்த்துபவராக மாற்கு விவரித்தாலும், இயேசுவை மேசியா என்று பேதுரு அடையாளம் கண்டுகொண்ட பின்பு, அவருடைய பதிவுகள் ஒரு பரபரப்பூட்டும் திருப்பத்தை ஏற்படுத்தியது. "...நீர் கிறிஸ்து என்றான். அப்பொழுது தம்மைக்குறித்து ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு அவர்களுக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார்." (மாற். 8:29, 30) அதற்கு பின் அவர் பாடுபட்டு மரிக்க வேண்டும் என்று இயேசு அவர்களிடம் கூறினபோது, பேதுரு அவ்வார்த்தைகளுக்கு தடை விதித்தார். ஆனால், இயேசுவின் முழுமையான ஊழியத்தைப் பற்றி தெளிவாக பேதுரு புரிந்து கொள்ளாததினால், இயேசு பேதுருவை சாத்தான் என்று சொல்லி, கடுமையாக கடிந்து கொண்டார். அத்தருணத்தில் பரலோக பிதாவின் சித்தத்தை இயேசு செய்வதற்கு தடையாக சாத்தான் பேதுருவை தம்முடைய கருவியாக பயன்படுத்தினதை அவர் தெளிவாகக் கண்டார்.

இதுவே, "மேசியாவின் இரகசியம்" - இயேசு மரிக்க வந்தார், மாறாக ரோம சாம்ராஜ்யத்தைப் புறக்கணிக்கும்படியாக அற்புதத்தை செய்ய வரவில்லை. அதற்கு பின் அந்த புஸ்தகத்தின் முடிவு வரைக்கும் இயேசுவின் பாடுகளும், மரணமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவைகளுக்கு எதிர்மாறாக இயேசு மரித்தபோது, "மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன் என்றான்" (மாற். 15:39) என்று நூற்றுக்கு அதிபதி ஒருவர் இயேசுவின் உண்மையான அடையாளத்தைக் கண்டுபிடித்தார். வெவ்வேறு விதமாக இயேசுவை பற்றியும், அவருடைய ஊழியத்தைப் பற்றியும் அற்புதமான பதிவுகளை செய்த மாற்குவுக்கு நாம் எவ்வளவு கடன் பட்டிருக்கிறோம்!

# மாற்கு சுவிசேஷத்திலுள்ள அற்புதங்கள்



"அங்கே சீமோனுடைய மாமி ஜுரமாய்க் கிடந்தாள்; உடனே அவர்கள் அவளைக்குறித்து அவருக்குச் சொன்னார்கள். அவர் கிட்டப்போய், அவள் கையைப் பிடித்து, அவளைத் தூக்கிவிட்டார்; உடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று; அப்பொழுது அவள் அவர்களுக்குப் பணிவிடைசெய்தாள். சாயங்காலமாகிச் சூரியன் அஸ்தமித்தபோது, சகல பிணியாளிகளையும், பிசாசுபிடித்தவர்களையும், அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். பட்டணத்தார் எல்லாரும் வீட்டு வாசலுக்கு முன்பாகக் கூடிவந்தார்கள்" (மாற். 1:30- 33)

மாற்கு எழுதின சுவிசேஷத்தில் காணப்படும் இயேசுவின் அற்புதங்களையும், அதை குறித்த விவரங்களையும் பொருத்தவரையில், மற்ற சுவிசேஷங்களைப்போல, எந்த காரியங்களும் சேர்க்கப்படவும் இல்லை, புறக்கணிக்கப்படவுமில்லை. ஆகவே, மாற்கு எழுதின சுவிசேஷத்தின் நோக்கம் மற்றும் துவக்கத்தின் ஆழமான விலையேறப்பெற்ற பார்வையை பெற்றுக்கொள்கிறோம். விசேஷமாக பேதுரு கூட இருந்தபோது, நடப்பிக்கப்பட்ட அற்புதங்களில் இவைகளை உண்மை என்று காணலாம்.

கப்பர்நகூமில் பிசாசு பிடித்திருந்த ஒரு மனுஷனை இயேசு சொஸ்தப்படுத்தினதாக மாற். 1:23-36 வசனங்கள் குறிப்பிடுகின்றது. அதற்குப்பின் இயேசு பேதுருவின் மாமியை சொஸ்தப்படுத்தி, தொடர்ந்து வியாதியஸ்தரையும், பிசாசு பிடித்தவர்களையும் குணப்படுத்தினார் என்று 36-ம் வசனம் கூறுகிறது.

லூக்கா சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்ட இந்த வரிசையான சம்பவங்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்கையில், ஒரு முக்கியமான விவரம் மாற்கு சுவிசேஷத்தில் விடப்பட்டிருப்பதைக் காணலாம். மேலும், மாற். 1:36-ல் குறிப்பிடப்பட்ட அதே சம்பவத்திற்கு, லூக். 5:2-11 வசனங்கள் அதிகமான விவரங்களைத் தருகிறது. அதே நேரத்தில் மாற்கு எழுதின சுவிசேஷத்தில், சீமோன் மற்றும் அவரோடு இருந்தவர்கள் இயேசுவை பின்பற்றினார்கள் என்று வெறுமையாக குறிப்பிடப்படுகிறது. மற்றும், அற்புதமாக மீன் பிடிக்கப்பட்ட விலைமதிப்பற்ற விவரங்களை லூக்கா தம்முடைய சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறார்! தொடர்ச்சியாக, பேதுருவும் மற்ற சீஷர்களும் இரா முழுவதும் வலைகளைப் போட்டாலும், அதில் எந்த மீன்களும் அகப்படவில்லை என்று கூறுகிறார். அதற்கு பின் இயேசுவின் கட்டளையின் படி மீண்டும் தங்களுடைய வலைகளை வீசினபோது, தங்கள் வலைகள் கிழியத்தக்கதாகவும், அவைகளை படகில் நிரப்பின பின்பு, படகு அமிழத்தக்கதாகவும் மீன்கள் நிரம்பியது! லூக். 5:8-ம் வசனத்தில், விசேஷமாக அதின் முடிவுரையை நாம் பார்க்கும் பொழுது - "சீமோன் பேதுரு அதைக் கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப்போகவேண்டும் என்றான்." (லூக். 5:8) இவ்வளவு அற்புதமான விவரங்களை மாற்கு எழுதின சுவிசேஷத்தில் ஏன் தவிர்க்கப்பட்டது?

இயேசு தண்ணீரின் மேல் நடந்து வந்த காரியத்தைக் குறித்து, மாற்கு எழுதின சுவிசேஷத்தில் நாம் பார்க்கும் பொழுது, (மாற். 6:44-52), பேதுரு அவரிடத்திற்கு தண்ணீர் மேல் நடந்த காரியம் குறிப்பிடாமல் இருப்பது மிக ஆச்சரியமாக இருக்கிறது! பேதுருவின் அற்புதமான அனுபவத்தை நாம் மத்தேயு சுவிசேஷத்தில் காணலாம். (மத். 14:22-33) இந்த அற்புதத்தில் பேதுரு பெற்ற அனுபவத்தை மாற்கு சுவிசேஷத்தில் ஏன் எழுதப்படவில்லை?

இவைகளுக்கு எதிரிடையாக மாற்கு சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இயேசுவின் அற்புதங்கள் மிகச் சுருக்கமாக மத்தேயுவில் காணப்பட்டாலும், வீட்டின் கூரையைப் பிரித்து இயேசுவால் சொஸ்தமாக்கப்படுவதற்கு கீழே இறக்கிவிடப்பட்ட திமிர்வாதக்காரனுக்கு நடப்பிக்கப்பட்ட அற்புதம் மிக விவரமாக மாற்கு சுவிசேஷத்தில் காணலாம். (மாற். 2:1-12) குறிப்பாக இந்த அற்புதத்தை இவ்வளவு விவரமாக மாற்கு எழுதினதின் காரணம் என்ன?

மற்ற மூன்று சுவிசேஷத்தில் காணப்படும் அதே அற்புதங்களை மாற்கு தன்னுடைய சுவிசேஷத்தில் எழுதினாலும், இயேசு செய்த பதினைந்து அற்புதங்கள் எழுதப்படவில்லை. ஆயினும், இயேசு செய்த இரண்டு அற்புதங்கள் பிரத்தியேகமாக மாற்கினால் பதிவு செய்யப்பட்டுள்ளது - காது கேளாத ஒரு ஊமையனை சொஸ்தமாக்கினார். (மாற். 7:31-37) மற்றும் பெத்சாயிதாவில் உள்ள குருடனுக்குப் பார்வையளித்தார் (மாற். 8:22-25). மாற்கு

சுவிசேஷத்தில் இயேசு நடப்பித்த பதினைந்து அற்புதங்கள் விடப்பட்டதின் காரணம் என்ன?

நான்கு சுவிசேஷங்களில் இரண்டாவது சுவிசேஷமாக மாற்கு எழுதியிருக்க வேண்டும் என்று பொதுவாக நம்பப்படுகிறது. இந்த கோணத்திலிருந்து நாம் பார்க்கும் பொழுது, சில சம்பவங்களை மீண்டும் பதிவு செய்ய வேண்டாம் என்று முடிவு செய்திருக்க வேண்டும் என்ற மாற்கின் கருத்தைப் பெறுகிறோம். ஆகவே, அவர் இயேசு செய்த பதினைந்து அற்புதங்களையும், மலை பிரசங்கத்திலுள்ள சில உவமைகளையும் பதிவு செய்யவில்லை. மாற்கு சுவிசேஷத்தின் பிறப்பிடத்தைக் குறித்து அறிந்து கொண்டால், அவர் மனதில் இருக்கும் நோக்கத்தை நாம் எளிமையாக புரிந்து கொள்ள முடியும்.

**தோற்றம்**

"கிறிஸ்துவின் வார்த்தைகள் அல்லது கிரியைகள் சரியான வரிசையில் எழுதப்படாமல் இருந்தாலும் பேதுருவின் எழுத்தாளராக இருந்த மாற்கு, தான் நினைவில் வைத்திருந்த அனைத்தையும் துல்லியமாக எழுதினார் - ஆயினும், மாற்கு ஆண்டவரிடத்தில் நேரடியாக எந்த போதனைகளையும் கேட்கவுமில்லை அல்லது அவரை பின்பற்றவும் இல்லை. ஆனால், பிற்காலத்தில் அவர் தன்னை பேதுருவோடு இணைத்துக் கொண்டார்" என்று ஆதிசபையில் எழுத்தாளரும், அப். யோவானின் சீஷனுமாகிய Papias என்பவர் எழுதினார். (குறிப்பு - "Explanation of the Lord's Discourses" (கிபி. 70 – 155).

பல காரணங்களினிமித்தமாக இச்செய்திகள் மிகவும் ஆர்வமூட்டக்கூடியதாக இருக்கிறது. முதலில் மாற்கு எழுதின சுவிசேஷத்தை - பதிவு செய்யப்பட்ட பேதுருவின் வார்த்தைகள் என்று Papias குறிப்பிடுகிறார். மேலும், மாற்கு சுவிசேஷம் மிக கவனத்தோடு எழுதப்பட்டது என்று அவர் வலியுறுத்துகிறார். அடுத்து, மாற்கின் சுவிசேஷம் வரிசையின் படியாக எழுதப்படவில்லை என்று குறிப்பிடுகின்றார். மேலும், அப். பேதுருவின் சுவிசேஷம், ஆதி சபையிலுள்ள புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு போதிக்கப்பட்டதும், கற்பிக்கப்பட்டதுமான வார்த்தைகளாக உண்மையில் காணப்படுகிறது. இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் வந்த பல எழுத்தாளர்கள் Papias -ன் அறிக்கையை உறுதி செய்தனர்.

**சூழ்நிலைகளில் ஆழமான நோக்கங்கள்**

மேற்கூறப்பட்ட செய்திகளை மனதில் கொண்டவர்களாக நாம் மாற்கு எழுதின சுவிசேஷத்தைப் பார்க்கையில், பேதுருவின் பிரசங்கத்தை முத்திரையாக அச்சுவிசேஷம் பெற்றிருப்பதைக் கண்டுபிடிக்கலாம். இயேசு பேசின காரியங்களுக்கும், செய்த காரியங்களுக்கும் சாட்சியாக அவருடைய முதல் அனுபவம் அங்கு குறிப்பிடப்படுகிறது. எடுத்துகாட்டாக, கப்பர்நகூமில் இயேசு செய்த காரியங்களும், அவர் போதித்த உபதேசங்களும் பேதுருவின் வீட்டில் நடைபெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. கீழ்காணும் சம்பவங்களிலுள்ள சில விவரங்களைக் காணலாம்.

1. இயேசு ஜெப ஆலயத்தை விட்டு பேதுருவின் வீட்டிற்கு சென்று, ஜுரத்தில் இருந்த பேதுருவின் மாமியை சுகப்படுத்தினார். (மாற். 1:29-31)

2. வியாதியஸ்தர்களையும், பிசாசுபிடித்தவர்களையும் பேதுருவின் வீட்டிலிருந்த இயேசுவிடம் கொண்டுவந்தனர். கப்பர்நகூம் பட்டணத்திலுள்ள அனைவரும் பேதுருவின் வாசலுக்கு முன் கூடினார்கள். (மாற். 1:32-34)

3. மேலும், பேதுருவின் வீட்டை இயேசுவின் வீடாகவும் அழைக்கப்பட்டிருக்கக்கூடும். (மாற். 2:1; 7:17; 8:28) அநேக ஜனங்கள் இயேசுவின் உபதேசத்தைக் கேட்பதற்கு அவருடைய வீட்டிற்குள் குவிந்திருந்ததினால், ஒருவரும் வாசல் வழியாகப் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது. ஆகவே, திமிர்வாதக்காரனாகிய ஒரு மனுஷனை சொஸ்தப்படுத்துவதற்காக பேதுருவின் வீட்டின் கூரையைப் பிரித்து கீழே இறக்கினார்கள். (மாற். 2:1-12)

4, மாற். 2:15-ம் வசனத்தில் இயேசுவின் வீடு என்று அழைக்கப்பட்ட அந்த வீடு, பேதுருவின் வீடாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், அங்கு வரிவசூலிப்பவர்களும், பாவிகளும் ஒருமித்து இயேசுவோடு கூடி போஜனம் பண்ணினார்கள்.

5. இயேசுவை பாதுகாப்பதற்காக அவருடைய குடும்பத்தினர் சிலர் இயேசுவை காணும்படியாக பேதுருவின் வீட்டிற்கு வந்திருக்க வேண்டும். இந்த சம்பவம் மாற்கு எழுதின சுவிசேஷத்தில் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இச் சம்பவத்தை அப். பேதுரு மட்டுமே நேரில் கண்டவர். (மாற். 3:20, 21)

மாற்கு சுவிசேஷத்தில் காணப்படும். "பேதுருவை மையமாகக் கொண்ட" காரியம் மற்றொரு சூழ்நிலையிலும் பிரதிபலிக்கிறது. இந்த ஒரு சம்பவமானது பேதுருவின் கண்ணோட்டத்திலிருந்து காணப்படுவதைப் பார்க்கலாம். இயேசு தம்முடைய சீஷராக இருப்பதற்கு

பேதுருவை அழைத்த காரியம் முதலாம் அதிகாரத்தின் துவக்கத்தில் காணப்படுகிறது. (மாற். 1:16-18) அதற்கு பின் 8-ம் அதிகாரத்தில், இயேசுவே கிறிஸ்து என்று அறிக்கை செய்து, சீஷர்களின் கூட்டத்திற்கு ஒரு பேச்சாளனாக பேதுரு உயர்த்தப்படுகிறார். வெகு சீக்கிரத்தில் பேதுரு இயேசுவால் கடிந்து கொள்ளவும் படுகிறார். (மாற். 8:27-33) இப்படியாக தனிப்பட்ட அனுபவங்களை முதலில் அப். பேதுரு பெற்றிருப்பதைக் காண்பிக்கிறது.

மாற்கு சுவிசேஷம், அப். பவுலின் நேரடியான பார்வையில் நடைபெற்ற இயேசுவின் ஊழியம் என்பதை மேலும் சில சூழ்நிலைகள் ஆதாரமாக உறுதி செய்கிறது. மாற்கு, பேதுருவின் வார்த்தைகளை எழுதிக் கொண்டிருந்ததினால், இவைகள் அனைத்தையும் பேதுரு ஆதி புறஜாதி சபைகளுக்கு பிரசங்கித்த பிரசங்கங்களிலிருந்து செய்தவைகளை பதிவு செய்திருக்க வேண்டும்.

இது உண்மையானால், மாற்கு எழுதின சுவிசேஷம் தலை சிறந்ததாகக் காணப்பட்டாலும் அது இயேசுவின் மற்றொரு கோணத்தின் வரலாறு ஆகும். மாறாக, பேதுருவின் தனிப்பட்ட அனுபவங்கள் ஆதி சபையின் சகோதரர்கள் விசுவாசத்தில் கொழுந்துவிட்டு எரிவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு வெளிச்சத்தின் பிரதிபலிப்பாக இருக்கிறது. நாம் மேலும் சென்று மாற்கு எழுதின சுவிசேஷத்தை அப்போஸ்தலர் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள அப். பேதுருவின் வாழ்க்கையையும், அவர் பெற்ற அனுபவங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, பேதுரு எழுதின முதலாம் மற்றும் இரண்டாம் நிருபங்களில் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளைக் காட்டிலும் அதிகமான ஆலோசனைகளைக் காணலாம்.

இந்த தொடர்புகள் அப். பேதுருவிடம் தனிப்பட்ட வேலைகளையும், நோக்கங்களையும் மிக அருகாமையில் காண்பிக்கிறது. ஆதி சபையில் சுவிசேஷ வேலைகள் வல்லமையாக செயல்பட்ட கோணங்களை மாற்கு எழுதின சுவிசேஷத்தைப் புரிந்து கொள்வதின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

- பேதுரு தண்ணீரின் மேல் நடந்த அந்த முக்கியமான சம்பவத்தை மாற்கின் சுவிசேஷத்தில் பதிவு செய்யப்படாத காரணம் என்ன? ஒருவேளை, அனைவருடைய கவனத்தையும் அப். பேதுரு தன் வசமாய் திருப்புவதற்கு விரும்பாமல், இயேசு கிறிஸ்துவை மையப்படுத்தியிருக்க வேண்டும்.
- கூரையைப் பிரித்து அந்த திமிர்வாதக்காரனை வீட்டிற்குள் இறக்கினதைக் குறித்த விவரங்களை மாற்கு இவ்வளவு தெளிவாக எழுதியதின் காரணம் என்ன? ஒருவேளை இது பேதுருவின் வீட்டில் நடந்திருந்ததானால், அதை நேரடியாக பேதுரு கண்டு அதன் மூலமாக தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட பிரச்சனைகளை அவர் நேரடியாக அனுபவித்திருக்க வேண்டும்.
- இயேசு செய்த பதினைந்து அற்புதங்கள் மாற்கு சுவிசேஷத்தில் பதிவு செய்யாமல் விடப்பட்ட காரணம் என்ன? மாற்கு எழுதின சுவிசேஷத்தின் சாராம்சம் - மாற்கினால் பதிவு செய்யப்பட்ட துல்லியமான பேதுருவின் வார்த்தையாக இருந்தது. ஆயினும், அந்த சாராம்சத்தை முழுமையாக மாற்கு தொகுத்து எழுதினதால், சில உண்மையான காரியங்கள் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. ஒருவேளை மத்தேயு சுவிசேஷத்தில் இந்த அற்புதங்களும், மலை பிரசங்கத்தில் கூறப்பட்டுள்ள உவமைகளும் பதிவு செய்யப்பட்டிருந்ததானால் மாற்கு இவைகளை விட்டிருக்கலாம். மாற்கு அப்போஸ்தலனாக இராததினால், அப். மத்தேயுவின் ஊழியத்தில் குறிப்பிட விரும்பவில்லை.

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் பல பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் மேற்கோள் காட்டப்பட்டிருப்பதினால், அது யூத விசுவாசிகளுக்கு எழுதப்பட்டதென்று நம்பப்படுகிறது. மாற்கு எழுதின சுவிசேஷத்தின் துவக்கத்தில் ஒரே ஒரு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் காணப்படுகிறது. ஆகவே, மாற்கு தன்னுடைய சுவிசேஷத்தை யூத கிறிஸ்தவர்களுக்காக அல்ல, மாறாக விசுவாசமுள்ள புறஜாதிகளுக்கு எழுதப்பட்டதென்று இதன் மூலமாக நிரூபிக்கலாம். யூதர்கள் சுவிசேஷத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளும்படி மத்தேயு பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திலிருந்து அநேக ஆதாரங்களைக் காட்டினார். ஆனால், நியாயப்பிரமாணம் அறியாத புறஜாதிகள், சுவிசேஷத்தை எளிமையாகப் புரிந்து கொள்வதற்கு மாற்கு எந்தவிதமான பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்களை எடுத்துரைக்க வேண்டிய அவசியமில்லாதிருந்தது. கீழ்க்காணும் சில காரியங்களையும் கருத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

1. யூதர்களின் சில பாரம்பரிய பழக்க வழக்கங்களையும், (மாற். 7:3, 4) யூத ஓய்வு நாளுக்கு

முன் வரும் ஆயத்த நாளையும் குறித்து (மாற். 15:42) தெளிவாக விவரிக்கிறார்.

2. சில யூத அராமிக் வார்த்தைகளை தம்முடைய வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில், மாற்கு மொழிபெயர்த்துள்ளார். (மாற். 3:17; 5:41; 7:11, 34; 14:36; 15:22)

3. மாற்கு தம்முடைய சுவிசேஷத்தில் கிரேக்க வார்த்தைகளுக்கு சமமாய் இருக்கும் இலத்தீன் வார்த்தைகளையும் பயன்படுத்தியிருக்கிறார்.

தேவன் தம்மோடு இராவிட்டால் எந்த மனுஷனும் இப்படிப்பட்ட அற்புதங்களை நடப்பிக்க இயலாதென்று இயேசுவை பற்றி புறஜாதி விசுவாசிகளுக்கு காரியங்களை நிரூபிப்பதற்கு மாற்கு தன்னுடைய சுவிசேஷத்தை விசேஷித்த அற்புதங்களை பதிவு செய்திருக்கிறார். மாற்கின் சுவிசேஷத்தை வாசிப்பவர்களுக்கும் புறஜாதி விசுவாசிகளுக்கும் இயேசுவே மேசியா என்பதை நிரூபிக்கக்கூடிய பல ஆதாரமான அற்புதங்களுக்கு பேதுருவே நேரடியான சாட்சி. மத்தேயுவின் புத்தகத்தை வாசித்த புறஜாதியார், அவைகளில் நரூபிக்கப்பட்ட தீர்க்கதரிசன நிறைவேற்றங்களின் பொருளைக் குறித்து அறியாதிருந்தார்கள். ஆயினும், பல வழிகளில் இவைகளை நிரூபிக்க வேண்டிய ஆதாரங்கள், முன் வைக்கப்பட்டதினால், சுவிசேஷயுகம் முழுவதிலும் காணப்படும் விசுவாசிகளுக்கு நன்மையை ஏற்படுத்தியது. இணைந்து எழுதப்பட்ட சுவிசேஷங்களின் வழியாக, இயேசு பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினது மட்டுமல்ல, அவரே மேசியா என்பதற்கான தெய்வீக வல்லமையுள்ள காரியங்கள் பல நடத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆதி சபையில் மனந்திரும்பிய புறஜாதிகளுக்கு அப். பேதுருவின் ஊழியங்கள் மற்றும் மாற்கின் சுவிசேஷத்தின் வழியாக பதிவு செய்யப்பட்ட அற்புதங்களையும், பரிசுத்த ஆவியின் வரங்களினால் தன்னுடைய வாழ்க்கையில் நடைபெறும் காரியங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு மிக ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும். இயேசு கொடுத்த வாக்குத்தத்தங்களையும், சுவிசேஷத்தின் அனுபவங்களிலும், பகிர்ந்து கொள்வதற்கான முழுமையான வாய்ப்புகளை இந்த அனுபவங்கள் அவர்களுக்கு கொடுத்திருக்க வேண்டும்.

சுவிசேஷயுக சபையில் இயேசு தம்முடைய மாபெரும் சத்தியங்களை யூதர்கள் மற்றும் புறஜாதிகளுக்குக் கொடுத்த விதங்கள் நம்மை அதிகமாக உற்சாகப்படுத்துகிறது. இயேசுவை துணிகரமாக மறுதலித்த போதிலும், அதற்கு பின் அப். பேதுருவுக்குள் இயேசு ஏற்படுத்திய விசுவாசத்தையும், பக்தியையும் நமக்கு மிகவும் ஆறுதல் அளிக்கக்கூடியதாய் இருக்கிறது. அன்று இயேசு பேதுருவிடம் முதலீடு செய்ததுபோல, நாம் பலவீனர்களாக இருந்தபோதிலும் நம்மிடமும் செய்திருக்கிறார். இயேசு அன்று யூதர்கள் மற்றும் புறஜாதிகளுக்கு அறிவை புகட்டும் திறவுக் கோல்களைக் கொடுத்திருந்தார். இயேசுவே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்ற அஸ்திபாரமான சத்தியத்தின் மேல் அவருடைய சபை கட்டப்பட வேண்டும் என்று அவர் கூறினார். (மத். 16:19) யூதர்களுக்கான பேதுருவின் ஊழியம் புதிய ஏற்பாடு முழுவதிலும் தெளிவாக பதிவு செய்யப்பட்டிருந்தாலும் புறஜாதிகளுக்கான அவருடைய ஊழியம் மிக உறுதியாக மாற்கு சுவிசேஷத்தில் காணப்படுகிறது - (மாற்கு பேதுருவின் எழுத்தாளர்.)

பேதுருவின் பெலவீனத்திற்குள் இயேசு பெலத்தை விதைத்தார். புதுப்பிக்கப்பட்ட உறுதியான நம்பிக்கையை பேதுருவின் சந்தேகத்தின் மத்தியில் இயேசு விதைத்தார். இயேசுவின் இரத்தத்தின் மேல் உள்ள நம்பிக்கை பேதுருவுக்குள் வளர்ச்சியடைந்தது. பேதுருவின் வார்த்தைகள் மற்றும் மாற்கின் எழுத்தின் வழியாக புறஜாதிகளுக்கு சுவிசேஷம் விவரிக்கப்பட்ட இயேசுவின் அற்புதமான விதத்தைக் காணலாம். புறஜாதிகளின் ஆவிக்கேற்ற தேவைகளை இயேசு மென்மையாக உபதேசித்தார். மனந்திரும்பிய புறஜாதிகள் சங்கீதக்காரர் எழுதிய சில வார்த்தைகளை தங்களுடைய முடிவுரையாகக் கொண்டிருக்க வேண்டும். "அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்." (சங். 45:11)

"The Life of Christ" என்ற புத்தகத்தை எழுதின கட்டுரை Dean Fredrick Sarrar-ன் வார்த்தைகளோடு முடிகிறது. திமிர்வாதக்காரன் சொஸ்தப்படுத்தப்பட்ட அற்புதத்தின் ஆழமான பார்வையை Sarrar நமக்கு கொடுக்கிறார்.

"தமக்கு சொந்த பட்டணமாக இப்போது கருதப்படும் கப்பர்நகூமுக்கு இயேசு முதலில் சென்றார் - அது பேதுருவின் வீடாக இருந்திருக்க வேண்டும். பொதுவாக கப்பர்நகூமுக்கு அவர் வந்தபோது அவ்வீட்டில் தங்கினார். அங்கு அதிகமதிகமான கூட்டங்கள் சூழ்ந்து வீட்டை நிரப்பியது. வீட்டைச் சுற்றிலும் ஜனக்கூட்டம் நெருக்கியது. வாசல் வழியாக ஒருவரும் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது. ஆனால் படுக்கையில் வியாதியாய் இருந்த அந்த திமிர்வாதக்காரனை எப்படியாகிலும் இயேசுவினால்

சொஸ்தப்படுத்த வேண்டும் என்று உறுதி செய்து கொண்டவர்கள், வாசல் வழியாக அவனை தூக்கிச் செல்ல இயலாமல், இயேசுவை சென்று அடைவதற்கு, வீட்டின் மேற்கூரையைப் பிரித்து, அந்த வியாதியஸ்தனை இயேசுவுக்கு முன் இறக்கினார்கள். பலவந்தமாய் பரலோக இராஜ்யத்தைப் பற்றிக் கொள்ளக்கூடிய ஒரு தீவிரவாதிகளில் ஒருவராக இவர் இருக்கக்கூடும்.

அந்த மனுஷன் அமைதியாக ஒருவேளை ஆண்டவரின் சமுகத்தில் இப்படியாக வந்ததைக் குறித்து அவர் அதிர்ச்சியூட்டும் ஆச்சரியத்தில் நின்றிருக்கலாம். ஆயினும் அவருடைய பலத்திலும் தயக்கமில்லாத தைரியமுள்ள விசுவாசத்தினால் நடப்பிக்கப்பட்ட கிரியைகளைக் கண்டு இயேசு மகிழ்ச்சியடைந்தார். அதற்கு பின் அடிப்படையான ஆசீர்வாதங்களைக் காட்டிலும் ஐசுவரியமான ஆசீர்வாதத்தைக் கொடுத்தார். மேலும், "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்று பாவியான ஒரு ஸ்திரீயிடம் இயேசு கூறின அதே வார்த்தைகளை இவனிடமும் கூறினார். அந்த ஸ்திரீயிடம் இவ்வார்த்தைகளை அவர் கூறும்போது, இத்தருணத்தில் சுற்றி நிற்பவர்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள் அப்பொழுது நடக்கவில்லை. அவரை சுற்றியிருந்தவர்களின் விருப்பமற்ற முக பாவனைகளையும், கோபத்தையும் அங்கீகரிக்கப்படாத நிலையையும் அப்பொழுது இயேசுவால் காணமுடிந்தது. ஆயினும் இத்தருணத்தில் அமைதி நிலவியது.

இதற்கு எதிரிடையாக அவருடைய வார்த்தைகளுக்குத் தெளிவான சவால் வைக்கப்பட்டது. அவைகள் அற்புதவிதமாக நிரூபிக்கவும்பட்டது. இவர்களின் சிந்தையை வாசித்த இயேசு, அவர்களின் இருதயத்தில் நிறைந்திருந்த சொல்லில் அடங்காத கொடூரமான காரியங்களை எச்சரித்து நேரடியான ஒரு கேள்வியை முன் வைத்தார் - "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று கூறுவதா? அல்லது எழுந்து நட என்பதா? எது எளிது?" ஒருவருடைய பாவங்கள் மன்னிக்கப்படாமல், எழுந்து நட என்று ஒருவராலும் கூறமுடியாதே! பரத்திலிருந்து அதிகாரம் கொடுக்கப்படாவிட்டால், இக்காரியத்தை ஒருவரும் நிகழ்த்த முடியாதே! ஒரு வார்த்தையினால் இந்த திமிர்வாதக்காரனை சொஸ்தப்படுத்திய காரியம், பூமியின் மேல் பாவங்களை மன்னிக்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றவர் மட்டுமே இவைகளை நடப்பிக்க முடியும் என்று தெளிவாக காட்டப்படுகிறதல்லவா?

வீண் பிடிவாதக்காரர், இயேசுவை வெல்ல முடியாத நிலையில் பதிலளிக்க முடியாத அந்த கேள்வியை அமைதியோடு பெற்றுக்கொண்டனர். ஆனால் இயேசு அந்த திமிர்வாதக்காரனை நோக்கி, மற்றும் ஒருமுறை, "உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட" என்று கூறினார். உடனடியாக அவன் ஆத்துமாவுக்கு சமாதானமும், முடங்கியிருந்த அவன் கால்களுக்கு பெலனும் கிடைத்தது. அந்த மனுஷன் சொஸ்தப்படுத்தப்பட்டான். அவன் எழுந்து, படுத்திருந்த படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தான். இப்பொழுது இயேசுவை சுற்றியிருந்த ஜனக்கூட்டம் அவனுக்கு வழி விட்டது. அவன் தேவனை மகிமைபடுத்திக் கொண்டு தன் வீட்டிற்குச் சென்றான். அங்கிருந்த திரளான கூட்டம் ஒருவரோடொருவர் பயம் கலந்த ஆச்சரியத்தோடு, "எவ்வளவு விநோதமான காரியங்களை இன்று நாம் கண்டோம்! இப்படிப்பட்ட அதிசயங்களை முன்பு கண்டதில்லையே!" என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டு கலைந்து சென்றனர்.

ஒரு கடுமையான கேள்வி

# அவர் யாருடைய குமாரன்?



"பரிசேயர் கூடியிருக்கையில், இயேசு அவர்களை நோக்கி: கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். "(மத். 22:41, 42)

**Michael Nekora**

இவ்வளவு எளிமையான கேள்விக்கு பலவிதமான பதில்கள் காணப்படுவது மிக ஆச்சரியமாய் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் குடும்பத்தைப் பற்றி ஜனங்கள் நன்கு அறிந்திருந்ததினால், அவர் தம்முடைய சொந்த ஊரிலிருக்கும் ஜெப ஆலயத்தில் பிரசங்கிக்கும் போது, அவரை ஏற்றுக் கொள்ள மிகக் கடினமாய் இருந்தது. தீர்க்கதரிசியானவர் தம்முடைய சொந்த ஊரில் கனம் பெறுவதில்லை என்று நாம் வாசிக்கின்றோமல்லவா?. (மத். 13:57)

அவரை கண்டு ஆச்சரியப்பட்ட ஜனங்கள், "இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு யோசே யூதா சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லாவா?" (மாற். 6:3) என்று கேள்வி எழுப்பினார்கள். யோவான் எழுதின சுவிசேஷத்தில், "இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு அல்லவா, இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே;" (யோவா. 6:42) என்று கேட்டார்கள். யோசேப்பு இயேசுவின் மாம்சத்திற்குரிய தந்தையாக இராவிட்டாலும், சட்டத்தின்படி தந்தையாக இருந்தார். உண்மையில் மத்தேயு எழுதின வம்ச வரலாற்றில், அவர் நேரடியாக யோசேப்பு வரைக்கும் கொண்டு சென்றார். "யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான்; அவளிடத்தில் கிறிஸ்து எனப்படுகிற இயேசு பிறந்தார்." (மத். 1:16)

ஒருவர் மத்தேயு அல்லது லூக்கா எழுதின வம்ச வரலாற்றை எடுத்துக்கொண்டாலும், இவர்கள் இருவருமே தாவீது மற்றும் ஆபிரகாம் வரைக்கும் அழைத்து செல்கிறார்கள். இதைக் குறித்த முக்கியமான விவரங்களை பிறகு காணலாம். புதிய ஏற்பாட்டின் முதல் வசனம் இப்படியாக கூறப்படுகிறது - "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு:" (மத். 1:1)

"அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள் கொள்ளும் கிறிஸ்து என்ற கிரேக்க வார்த்தை, பழைய ஏற்பாட்டில் மேசியா என்று கூறப்படுகிறது" - இதினிமித்தம் இவரை ஆபிரகாமின் குமாரன் என்று ஏற்றுக்கொள்வது கடினமாயிருந்தது. ஏனெனில், தங்களையே ஆபிரகாமின் குமாரன் என்று பரிசேயர் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஒருமுறை இயேசு ஜெப ஆலயத்தில் பிரசங்கித்த போது, "நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்க வில்லை; விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர்" (யோவா. 8:33) என்று அவர்கள் இயேசுவிடம் கேட்டார்கள்.

**தாவீதின் குமாரன்**

"கிறிஸ்து யாருடைய குமாரன்?" என்று இயேசு பரிசேயர்களிடம் கேட்ட போது, அவர்கள், "அவர் தாவீதின் குமாரன்" என்று இயேசுவுக்கு பதிலளித்தார்கள். (மத். 22:42; மாற். 2:35) இராஜாவாகிய தாவீது, இந்த பொன்னான காலத்தைக் குறித்து, "கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்" (லூக். 1:32) என்று காபிரியேல் தூதன் மரியாளிடம் கூறினார்.

"அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்." (மத். 22:43-45) - (மாற். 12:36; லூக். 20:42 காண்க) என்ற கேள்வியை இயேசு பரிசேயர்களிடம் கேட்டபின் பரிசேயர்கள் இயேசுவிடம் எந்த கேள்வியையும் கேட்க துணியவில்லை. இவ்வசனத்தை தாவீது தம்முடைய 110-ம் சங்கீதத்தில் முதல் வசனமாக எழுதியிருந்ததை பரிசேயர்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.

அறிந்திருந்த போதிலும் அவர்களால் பதில் கூறமுடியவில்லை, இந்த கேள்வி ஒரு விடுகதையாகவே இருந்தது. ஏனெனில், தாவீதின் மரணத்திற்குப் பின் பல நூற்றாண்டுகள் கழித்து வந்த இயேசு, தாவீதை காட்டிலும் மேன்மையாகவே இருப்பது எப்படி? மனுஷ வழிகளில் இது கூடாதே.

மேலும் தாவீது, ஆண்டவரை தம்முடைய வலது பாரிசத்தில் அமரும்படி யேகோவா கூறுகிறார் என்றார்.

இப்படியாக, தாவீதின் குமாரன் காலப்போக்கில் யேகோவா தேவனின் வலது பாரிசத்தில் அமரும்படியாக உயர்த்தப்படுவார். வசனங்களைப் பொருத்த வரையில் தங்களையே வல்லுநர்களாக எண்ணிக் கொண்டிருந்த பரிசேயர்களிடம் இப்படிப்பட்ட கேள்வியை ஒருவரும் அந்நாள் வரைக்கும் கேட்டதில்லை, அவர்களுக்கு இது ஒரு குழப்பமாக இருந்தது. "அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை." (மத்.22:46)

ஒருமுறை இயேசு தம்முடைய சீஷர்களோடு எரிகோவிலிருந்து பயணிக்கையில், பர்திமேயு என்ற பார்வையற்ற ஒரு மனுஷனை சந்தித்தார்கள். "அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான். அவன் பேசாதிருக்கும்படி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று, முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான்." (மாற். 10:47, 48) இயேசு அவ்விடத்தில் நின்று பர்திமேயுவின் கண்களை பார்வையடைய செய்து ஒரு அறபுதத்தை நிகழ்த்தினார்.

இயேசு சிலுவையில் மரிக்கும் சில நாட்களுக்கு முன் ஆரவாரத்தோடு எருசலேமுக்குள் வந்தபோது, அங்கிருந்த திரளான ஜனங்கள், "முன்நடப்பாரும் பின்நடப்பாருமாகிய திரளான ஜனங்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று" (மத். 21:9) என்று ஆரவாரித்து வரவேற்றார்கள். இவ்வார்த்தைகள் நேரடியாக சங். 118:25, 26 வசனங்களிலிருந்து கூறப்பட்டதாகும். "கர்த்தாவே, இரட்சியும்; கர்த்தாவே, காரியத்தை வாய்க்கப்பண்ணும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம்." ஓசன்னா என்ற எபிரெய வார்த்தை "இப்பொழுதே இரட்சியும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இஸ்ரயேலின் மேசியாவாக ஏற்றுக் கொண்டவர்களும் அவர்களுடைய சீஷர்களுமே இவ்வாறாக ஆரவாரித்தார்கள். இவர்களை பொருத்தவரையில் இயேசு தான் மேசியா என்பதை பொதுவாக பிரகடனப்படுத்தினார்கள். வெகு சீக்கிரத்தில் இவர் இராஜாவாக இருப்பார் என்பதை அவர்கள் மனதில் கொண்டிருந்திருக்க வேண்டும்.

**தேவனுடைய குமாரன்**

இயேசு கிறிஸ்து, தாவீது மற்றும் ஆபிரகாமின் குமாரன் என்று மத்தேயு தம்முடைய முதலாம் வசனத்தில் குறிப்பிட்டாலும், கிறிஸ்துவின் தந்தையை குறித்து, வேறொரு விதத்தில் மாற்கு எழுதினார். "தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்." (மாற். 1:1) மாற்கு சுவிசேஷத்தில் மற்றவர்களும், அசுத்த ஆவிகளும் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று கூறினாலும், இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்று எங்கும் குறிப்பிடுவதில்லை. (மாற். 3:11) லேகியோன் என்று அழைக்கப்பட்ட அசுத்த ஆவி (மாற். 5:7) மற்றும் சிலுவையின் அடியில் நின்ற நூற்றுக்கு அதிபதி (மாற். 15:39) மட்டுமே தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டனர். "நீ ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?" (மாற். 14:61) என்று பிரதான ஆசாரியன் இயேசுவிடம் கேட்ட கேள்வியையும் இதில் நாம் சேர்த்துக் கொள்ளலாம். மத்தேயுவை பொருத்த வரையில், "இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" (மத். 26:63) என்று பிரதான ஆசாரியன் கேட்டதாக பதிவு செய்திருக்கிறார்.

தேவனுடைய வல்லமையினிமித்தம் இயேசுவின் பிறப்பு ஒரு அற்புதமானதாக இருந்தது. அவருடைய ஞானஸ்நானத்தின் போது, தேவன் அவரோடு கொண்டிருந்த உறவை மற்றவர்களும் கேட்கும்படி உறுதி செய்தார். "அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது." (மத். 3:17) ஆனால் இப்படிப்பட்ட ஒரு உறவை கோருவது பலருக்கு தேவ தூஷணமாய் தோன்றியது. பிதாவும் தானும் ஒன்றாக இருக்கிறோம் என்று இயேசு கூறினபோது: "அப்பொழுது யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்றார். யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை; நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி, இவ்விதமாகத்

தேவதூஷணஞ்சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்." (யோவா. 10:31-33)

ஆனால், சங். 82:6 வசனத்திற்கு இயேசு அவர்களுடைய கவனத்தை திருப்பிய போது, அவர் மேல் சாட்டப்பட்ட குற்றம் உதிர்ந்து போனது. "நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன்." (சங். 82:6) இயேசு தொடந்து, "தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களைத் தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க, பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னைத் தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணஞ்சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?" (யோவா. 10:35, 36) என்று கூறினார். இது ஒரு சரியான வாதமாக இருந்தபோதிலும், இதை குறித்து விவாதிப்பதற்கு யூதர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளாமல், அவரை கொல்ல விரும்பினார்கள்.

தேவனுடைய குமாரன் என்ற சொற்றொடர் சுவிசேஷங்களில் அடிக்கடி காணப்படும் என்று எண்ணலாம் - 28 முறைகள் காணப்படுகிறது. ஆனால் இதைக்காட்டிலும் மற்றொரு சொற்றொடர் அதிகமாகக் காணப்படுகிறது - "மனுஷகுமாரன்" (81 முறைகள் நான்கு சுவிசேஷங்களிலும் காணப்படுகிறது.) பொதுவாக பல நேரங்களில் இயேசு தம்மை மனுஷகுமாரன் என்று குறிப்பிடுகிறார். "அவரோ ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாதிருந்தார். மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? என்று கேட்டான். அதற்கு இயேசு: நான் அவர் தான்; மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார்" (மாற். 14:61, 62) என்ற வசனத்தில் மாற்றப்பட்ட சொற்றொடரைக் காணலாம்.

**மனுஷகுமாரன்**

மாற்கு சுவிசேஷத்தில், இயேசு தம்மை மனுஷகுமாரன் என்று குறிப்பிட்ட எல்லா சம்பவங்களையும் கீழ் காணும் கட்டத்திற்குள் காணலாம்.

**இயேசு "மனுஷகுமாரன் என்பதற்கான குறிப்பு"**

"பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு." (மாற்கு 2:10)

"மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்." (மாற்கு 2:28)

மனுஷகுமாரன் பல பாடுகள்பட்டு, மூப்பராலும் ... ஆகாதவனென்று தள்ளப்பட்டு. (மாற்கு 8:31)

"என்னைக் குறித்து....எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் ...வெட்கப்படுவார்." (மாற்கு 8:38)

"மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும், நீங்கள் கண்டவைகளை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்." (மாற்கு 9:9)

"மனுஷகுமாரன் பல பாடுகள் படுவார்." (மாற்கு 9:12)

"மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார்..., அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள்." (மாற்கு 9:31)

"மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும்... ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார்கள்." (மாற்கு 10:33)

"மனுஷகுமாரன்...அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." (மாற்கு 10:45)

"அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வருகிறதைக் காண்பார்கள்." (மாற்கு 13:26)

"ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணம்போக எத்தனிக்கும்போது..." (மாற்கு 13:34)

"எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ!" (மாற்கு 14:21)

"மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார்." (மாற்கு 14:41)

இவ்வார்த்தைகளிலிருந்து தம்முடைய சீஷர்கள் எதை புரிந்து கொள்ள வேண்டும் என்று இயேசு எதிர்பார்த்தார்? பழைய ஏற்பாட்டில் பலமுறைகள் இவ்வார்த்தை காணப்படுவதினால் யூதர்களுக்கு இது பரிட்சயமான வார்த்தையாக இருந்தது.

எசேக்கியேலின் புத்தகத்தில் 80 முறைகளுக்கு மேலாக "மனுஷகுமாரன்" என்ற சொற்றொடர் காணப்படுகிறது. மேலும் அது தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலுக்கு பொருத்தப்படுகிறது. மேலோட்டமாக அந்த சொற்றொடர் ஒரு தனிப்பட்ட நபரை விவரிக்கலாம்.

இயேசு இந்த சொற்றொடரை பயன்படுத்தின காரியத்தைக் குறித்து ஆல்பர்ட் பர்னாஸ் என்பவர் ஒரு கருத்தை முன்வைத்திருக்கிறார். "அவர் நம்முடைய மனித இனத்திற்கு விசேஷித்த தொடர்புள்ளவர் என்று வெளிப்படுத்தினார். அவர் நம்மில் ஒருவராக எல்லாவிதத்திலும் மனுஷர் இயல்பில் இருந்ததைக் குறிப்பிடுகிறார்."

தானி.7:13 என்ற வசனத்திற்கு விரிவாகக் கொடுக்கும் விளக்கவுரை - பழைய ஏற்பாட்டில், இவ்வசனத்தில் காணப்படும் சொற்றொடர் மட்டுமே மனுஷர்களுக்கு பொருந்தாது - என்று கூறுகிறார். "இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்." (தானி. 7:13, 14)

"ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து தானா" என்ற கேள்வியை பிரதான ஆசாரியர் இயேசுவிடம் கேட்டபோது, அவர் இந்த தீர்க்கதரிசனத்தை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். "மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார்." (மாற். 14:62) ஆம், இயேசு மனித இனத்தின் குணலட்சணங்களைப் பெற்றிருந்தார். அவர் பூரணமான பாடுகளையும், ஏமாற்றங்களையும், பசியையும் அனுபவித்திருந்தாலும், அவருடைய பணி நிறைவேறின பின் பரலோக பிதாவினிடம் பரலோகத்திற்கு உயர்த்தி எழுப்பப்பட்டு, தம்முடைய பரலோக பிதாவினால் நிச்சயமான ஆட்சி பொறுப்பை பெற்றுக் கொண்டு, "அவர் தாவீதின் ஆண்டவராக வீற்றிருப்பார்."

தெய்வீக திறமையாக இயேசு உயிர்த்தெழுந்த பின்னும், அவர் மனுஷகுமாரனாகவே இருந்தார். ஸ்தேவானுக்கும் அவர் மனுஷகுமாரனாகக் காணப்பட்டார். அவருடைய எதிராளிகள் அவரை கல்லெறிவதற்கு முன் ஸ்தேவான் ஒரு தரிசனம் கண்டார். "அவன் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு: அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்." (அப். 7:55, 56)

வேதாகமத்தில் ஒரு அதிகாரத்தில், "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்" (ஆதி. 1:26) என்று நாம் வாசிக்கின்றோம். மனுஷன் சிருஷ்டிக்கப்பட்ட போது, ஆட்சி பொறுப்பு அவரிடம் கொடுக்கப்பட்டது. பாவத்தினிமித்தம் அவர் அந்த பொறுப்பை தொலைத்தார். (ஸ்ட்ராங்ஸ் 120) மனுஷன் என்ற வார்த்தை எபிரெயு பாஷையில் ஆதாம் என்று காணப்படுகிறது. முதல் மனுஷனின் பெயரை Strongs 121-ல் காணலாம். ஆதாம் என்று அங்கு குறிப்பிடப்பட்ட முதல் எழுத்து, ஒரு மனுஷனின் பெயராக இருப்பதினால் அச்செழுத்தில் காணப்படுகிறது.

"மனுஷகுமாரனாகிய" இயேசு "ஆதாமின் குமாரனும்" "தாவீதின் குமாரனுமாய்" இருந்தார். இயல்பாகவே அவர் தாவீதின் அரியணைக்கும், ஆட்சிக்கும் வாரிசாக இருந்தார். அதேநேரத்தில் தானியேலின் தீர்க்கதரிசனம் தெளிவாக உரைப்பது போல, அநாதி காலங்களாக அவர் ஆதாமின் சிங்காசனத்திற்கும், ஆட்சிக்கும் வாரிசாக இருந்ததை தெளிவாகக் காட்டுகிறது.

ஆதாம் ஜீவனை இழந்தான். "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவா. 10:10) என்று இயேசு கூறினார். இந்த பூமியும் தேவனுடைய பரிபூரணத்திற்கு சீரமைக்கப்படும். "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும். மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்." (அப். 3:21, 22)

"அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்." (ஏசா. 25:9)

ஒரு செழிப்பான ஊழியம்

# இயேசுவின் கலிலேய ஊழியம்



"அவர் வனாந்தரத்திலே நாற்பதுநாள் இருந்து, சாத்தானால் சோதிக்கப்பட்டு, அங்கே காட்டுமிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக்கொண்டிருந்தார். தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்.. யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்." (மாற். 1:13-15)

**Regis Liberda**

மாற்கு எழுதின சுவிசேஷத்தில் முதல் 9 அதிகாரங்கள் இயேசுவின் கலிலேயா ஊழியத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இயேசுவின் ஞானஸ்நானத்திற்குப் பின் வனாந்தரத்தில் நாற்பது நாள் சோதனை நீடித்தது. அதற்கு பின் இயேசுவின் ஊழியம் கலிலேயாவில் துவங்கப்பட்டது. அங்கு அவர் செய்த அற்புதங்களினிமித்தம் அவருடைய மகிமை அதிகமாக பிரசித்தியானது.

கலிலேயாவில் இயேசு, வார்த்தைகளின்றி கற்பித்த சில பாடங்களைக் காணலாம். இதில் அவர் தேர்ந்தெடுத்த இடமும், சீஷர்களை அவர் தேர்வு செய்வதற்காகப் பயன்படுத்தின முறைகளையும் காணலாம். அவருடைய உபதேசத்தின் ஆழமான கண்ணோக்கங்களும் மற்றும் ஒரு சிறிய படகில் அவர் செய்த ஊழியங்களையும் வெளிப்படையாகக் காணலாம். கூடுதலாக, கலிலேயாவில் அவர் தம்முடைய வார்த்தைகளைக் கொண்டு கற்பித்த சில பாடங்களையும் காணலாம். இயேசு அற்புதங்கள் செய்த பின், அவைகளை இரகசியமாக வைத்திருக்கும் படி அவர் கூறினதாக மாற்கு குறிப்பிடுகிறார். அதே நேரத்தில் காது கேளாத ஒரு மனுஷனை இயேசு சுகப்படுத்திய பின் தெக்கப்போலியாவில் உள்ளவர்களிடம் நடந்ததை அறிவிக்கும்படி இயேசு அனுப்பினதாக மாற்கு குறிப்பிடுகிறார். இவைகளுக்குக் காரணம் என்ன?

மாற்கு எழுதின சுவிசேஷம் - புறஜாதிகளை இலக்காகக் கொண்டு, பேதுரு பேசின பிரசங்கங்களில் சில தொகுப்புகள் என்ற நிச்சயமான காரியத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் முந்தைய பாடங்களில் வாசித்தபடி பேதுருவின் பயணத்தில் துணையாக சென்றவரும், அவருடைய வார்த்தைகளை எழுதினவராகிய மாற்கு, பேதுருவிடம் கேட்டறிந்த விவரங்களை தம்முடைய சுவிசேஷத்தில் பதிவு செய்தார்.

மாற்கு பதிவு செய்த காரியங்களில் மற்ற சுவிசேஷங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ள சம்பவங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், பேதுரு வலியுறுத்தின சில தனிப்பட்ட குறிப்புகளை நாம் காணலாம். மாற்கு எழுதின சுவிஷேத்தில், குறிப்பாக இயேசுவின் கலிலேயா ஊழியத்தில் நடந்த பல சம்பவங்களுக்கு அப். பேதுரு நேரடியான சாட்சி.

### முதல் சீஷர்களின் தேர்வு

**"அவர் கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிறபோது அவர்களைக் கண்டார். இயேசு அவர்களை நோக்கி: என்பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள். அவர் அவ்விடம் விட்டுச் சற்று அப்புறம் போனபோது, செபெதேயுவின் குமாரன் யாக்கோபும் அவன் சகோதரன் யோவானும் படவிலே வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருக்கிறதைக் கண்டு, உடனே அவர்களையும் அழைத்தார்; அப்பொழுது அவர்கள் தங்கள் தகப்பனாகிய செபெதேயுவைக் கூலியாட்களோடு படவிலே விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்."** (மாற். 1:16-20)

இயேசுவின் ஊழியத்தின் துவக்கத்தை மாற்கு தம்முடைய சுவிசேஷத்தில் கெனசரேத் கடல் அருகில் அமைதியான சாட்சியோடு அறிமுகப்படுத்துகிறார். இயேசு அதிகமாக அறியப்படாதிருந்தார்: ஆகவே, தங்களுடைய அன்றாட வேலையை செய்து கொண்டிருந்த மீன் பிடிப்பவர்களை அழைப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. கரையோரத்தில் நடந்த இயேசு, சீமோன் மற்றும் அந்திரேயா தங்களுடைய படகிலிருந்து வலைகளை வீசுவதைக் கண்டார். அதே நேரத்தில் யாக்கோபும்,

யோவானும் மற்றொரு படகில் அமர்ந்து கொண்டு, தங்களுடைய வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார்கள். வலையை கடலில் வீசுவதும், அதை பழுது பார்ப்பதும் மீன் பிடிப்பவர்களுக்கு உண்மையில் ஒரு முக்கியமான வேலையாக இருந்தது.

புதிய சீஷர்களை தேர்வு செய்யும் இந்த மிகப் பெரிய வேலைக்கு அடையாளமாக இயேசு இந்த மீன் பிடிக்கும் தொழிலை பயன்படுத்தினார். "வலைகளை வீசுதல்" மற்றும் "வலைகளை பழுது பார்த்தல்" என்ற இரண்டு வேலைகள் "மீன் பிடிப்பவர்களால்" நடத்தப்படும் இரண்டு நிச்சயமான வேலைகளாகும். கடலில் வலை வீசுவது, மீன்பிடிப்பவரில் காணக்கூடிய ஒரு செயலாகும். பேதுரு மற்றும் அந்திரேயா கடலில் வலையை வீசுவதற்கு முன் அதில் மீன்கள் உள்ளதா என்று உறுதிபடுத்திக் கொண்டு இந்த வேலையை செய்திருக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவனில் காணக்கூடிய பணியை இயேசு இக்காரியத்தின் மூலமாக சித்தரித்திருக்க வேண்டும் - சுவிசேஷத்தின் நற்செய்தியை பிரசங்கித்து இயேசுவின் அன்புக்கு சாட்சி கொடுக்க வேண்டும். மீன் பிடிப்பவர்களைப் போல, கிறிஸ்தவர்களும் சீஷர்களைக் குறித்த காரியங்களை நன்கு ஆராய்ந்து தேர்வு செய்ய வேண்டும். மேலும் இதற்கு அதிகமான பொறுமை தேவை. ஏனெனில், ஒருமுறை, இராமுழுவதும் மீன்கள் அகப்படாமல், மறுநாள் காலை அற்புதவிதமாக மீன்கள் அகப்பட்டது போலவும், சுவிசேஷ வேலைகள் நடைப்பெறலாம்.

அதற்கு பின், இயேசு யாக்கோபையும், யோவானையும் தங்களுடைய வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கையில் சந்தித்தார். ஒவ்வொரு முறையும் வலைகளை கடலிலிருந்து இழுக்கும் பொழுது, அது கிழிந்து விடுவதினால், அந்த வலையை மீண்டும் கடலில் வீசுவதற்கு முன், அதை பழுது பார்க்க வேண்டியதாய் இருந்தது. இதுவும் ஒரு கடுமையான வேலையாக இருந்தது. ஏனெனில், வலைகளைப் பழுது பார்க்காவிட்டால், பிடிக்கப்பட்ட மீன்களை கரையில் கொண்டுவந்து சேர்ப்பது இயலாத காரியமாகும். சிந்தையை தேவனைப் பற்றியும், அவருடைய திட்டங்களைப் பற்றியும் அறியக்கூடிய அறிவைப் பெறுவதற்கு நம்முடைய சிந்தைகளை ஆயத்தப்படுத்தும் கிறிஸ்தவ வேலைக்கு இதை ஒரு சித்திரமாக இயேசு காண்பித்திருக்க வேண்டும். அப்பொழுது, நாம் சத்தியம் என்ற வலையை வீசும் பொழுது, ஆயத்தமாக இருக்கும் இருதயங்களை ஆண்டவரிடத்தில் கொண்டு வந்து சேர்க்கலாம்.

இந்த நான்கு மீன் பிடிப்பவர்களும், திறமையுள்ள மனுஷர்களைப் பிடிக்கும் இயேசுவின் சீஷர்கள் ஆனார்கள். ஒரு சிறிய துவக்கத்திலிருந்து மிகப்பெரிய வேலைகளை நிறைவேற்றினார்கள். தம்முடைய சொந்த ஊழியத்தின் துவக்கத்தில் இயேசு முதல் மீன்களாக இவர்களைப் பிடித்தார். கலிலேயாவில் உள்ளவர்கள் மிகத் தாழ்மையுள்ளவர்களும், கடுமையாக வேலை செய்பவர்களுமாக இருந்ததினிமித்தம், இயேசு அப்பகுதியை தேர்வு செய்தார். இயேசு தேடின மீன்கள் மிகத் தாழ்மையாக இருக்க வேண்டும் என்பதை இதன் மூலம் இயேசு குறிப்பிடுகிறார்.

**சிறிய படகு**

"ஜனங்கள் திரளாயிருந்தபடியால் அவர்கள் தம்மை நெருக்காதபடிக்கு, தமக்காக ஒரு படவை ஆயத்தம்பண்ணவேண்டுமென்று, தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார்." (மாற். 3:10)

இங்கு நம்முடைய ஆண்டவர் கூறின வாக்கியங்களை மாற்கு மட்டுமே பதிவு செய்திருக்கிறார். கரையில் நின்ற ஜனங்களுக்கும், அவர் அமர்ந்திருந்த படகுக்கும் இடையில் எவ்வளவு தூரம் இருந்தால், அவருடைய உபதேசங்கள் பயனள்ளதாக இருக்கும் என்பதை இயேசு அறிந்து, படகை சற்று கடலுக்குள் தள்ளும்படி கூறினார். அந்த ஜனக்கூட்டத்தாரிடமிருந்து தன்னை பிரிப்பதற்கு அந்த படகை இயேசு பயன்படுத்தியிருக்க வேண்டும். ஒருவேளை அவர் ஓய்வெடுத்து ஜெபித்திருக்கலாம். ஆனால் முக்கியமாக அவருடைய ஊழியத்தை சிறப்பாக நடப்பிப்பதற்கு இக்காரியத்தை அவர் செய்திருக்க வேண்டும்.

இயேசு அந்த படகில் அமர்ந்து மிகத் திரளான ஜனங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என்று மாற்கு பதிவு செய்திருக்கிறார். (மாற். 4:1) போதிப்பதற்கும், ஊக்கம் அளிப்பதற்கும் இந்த கெனசரேத் கடல் இயற்கையாக அமைந்துள்ள ஒரு அழகான சூழ்நிலையாக இருந்தது. அந்த கடலை சுற்றியுள்ள மலைகள், அந்த கடலுக்குள்

அமர்ந்திருக்கும் நமது ஆண்டவர், இயேசுவின் பிரசங்கத்தைக் தங்களை மறந்து கேட்டுக் கொண்டிருந்த கரையில் நின்ற ஜனங்கள் போன்ற இக்காட்சிகளை நம்முடைய மனக் கண்களுக்கு முன் கொண்டு வருவோம். எவ்வளவு அற்புதமான காட்சி! (மாற். 1:22) இயேசு தம்முடைய அற்புதங்களினிமித்தம் முன்னதாகவே பிரசித்தப் பெற்றது போல, இப்பொழுது தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்த வல்லமையுள்ள வார்த்தைகளினிமித்தம் அவருடைய கீர்த்தி பரவியது. மறக்கப்பட்ட தேவனுடைய இராஜ்யத்தை மீண்டும் மனிதர்களின் சிந்தைக்குக் கொண்டுவருவதற்கு இயேசு பல வல்லமையுள்ள உவமைகளையும், உருவகங்களையும் பயுன்படுத்தினார்.

இயேசு அந்த சிறிய படகில் அமர்ந்தவாறு பல பாடங்களைக் கற்றுக் கொடுத்தார். அவரை சூழ்ந்து நின்ற ஜனக்கூட்டம் அவருடைய பிரசங்கத்திலிருந்து பல பாடங்களைக் கற்றுக் கொண்டது, அவருடைய சீஷர்களும் கூடுதலான சில விசேஷித்த பாடங்களை இயேசுவோடு படகில் அமர்ந்தவாறு கற்றுக் கொண்டார்கள். ஜனக்கூட்டத்திற்கு பிரசங்கித்த பின் அவர்கள் அந்த படகில் அமர்ந்தவாரே அக்கரைக்குச் சென்றார்கள். அந்த இராத்திரியில் மிகப் பெரிய புயல் எழும்பிற்று. நித்திரை செய்த இயேசுவை அனைவரும் எழுப்பி - "போதகரே, நாங்கள்மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பிட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார்." (மாற். 4:38, 39, 40)

அந்த புயலின் போது, இயேசு ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். அவர் எழுந்த போது, சீறிக் கொண்டிருந்த புயல் காற்றை அதட்டி, தன்னுடைய அற்புதமான கிரியைகளையும், பரலோக பிதாவின் மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கையையும் சீஷர்களுக்கு அப்போது வெளிப்படுத்தினார். தன்னுடைய சொந்த வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாராத புயல்களை தேவனுடைய வல்லமையைக் கொண்டு எவ்வாறு அமர்த்த வேண்டும் என்பதையும் கற்றுக் கொடுத்தார். "அப்பொழுது தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார். கொந்தளிப்பை அமர்த்துகிறார், அதின் அலைகள் அடங்குகின்றது." (சங். 107:28, 29) வசனத்திலுள்ள தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமாக இந்த அனுபவம் இருந்தது.

இயேசுவின் சீஷர்கள் இந்த உலகத்தில் சௌகரியங்களைவிட்டு வெகுதூரம் சென்று ஒரு புதிதான ஜீவனுக்குள் பிரவேசித்தவுடன், அபாயமான மத உபத்திரவங்களுக்குள் அகப்பட்டார்கள். இப்படிப்பட்ட புயல்கள் மத்தியில் நிலைத்து நிற்பதற்கு அதிகமான விசுவாசம் தேவைப்பட்டது. ஆகவே, இயேசு அவர்களின் விசுவாசத்தைப் பலப்படுத்தும்படியான அநேக அற்புதங்களை நடப்பித்து, அவர்களை ஆயத்தப்படுத்தினார்.

சில நாட்கள் சென்ற பின், சீஷர்கள் படகை செலுத்திக் கொண்டிருக்கும் போது, இயேசு தண்ணீரின் மேல் நடந்து வருவதைக் கண்டார்கள். அது ஒரு ஆவேசம் என்று எண்ணி அனைவரும் பயந்தார்கள். (மாற். 6:48) மீண்டும் இயேசு சிறிய படகில் சீஷர்களுக்கு ஒரு விசேஷித்த பாடத்தைக் கற்றுக் கொடுத்தார். இனிவரும் நாட்களில் மனுஷரைப் பிடிப்பதற்காக அவர்கள் செய்யும் வேலைகளில் இயேசு தனிப்பட்ட முறையில் அவர்களோடு இருக்கக்கூடிய காரியத்தை அவர் வலியுறுத்தி இருக்கக்கூடும். எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் இயேசு அவர்கள் அருகில் நின்று ஆறுதல் அளிப்பார் என்ற ஆழமான நம்பிக்கையை இந்த அனுபவத்தின் மூலமாக சீஷர்கள் கற்றுக் கொண்டார்கள். அற்புதமாக மீன் பிடித்த ஒரு சம்பவத்தையும், அந்த சிறிய படகில் அமர்ந்தவாறு இயேசு கற்பித்த பாடங்களையும் தொடர்புடையதாக லூக்கா சுவிசேஷம் காட்டுகிறது. (லூக்.5:4-9) இந்த சம்பவங்கள் இயேசு தம்முடைய முதல் சீஷர்களை தேர்வு செய்த பின், இயேசுவின் ஊழியத்தின் துவக்க மாதங்களில் நடந்தது. இதின் வழியாக இயேசு தம்முடைய சீஷர்களுக்குள் நம்பிக்கை என்னும் பாடத்தை விதைத்தார். வரும் காலத்தில் மனிதர்களைப் பிடிக்கக்கூடிய வேலைகளை

இயேசுவின் வழிநடத்துதலின் கீழ் மட்டுமே திறமையாக செய்து முன்னேற முடியும் என்பதை இயேசு காட்டினார். இந்த சீஷர்கள், யுகம் முழுவதிலும் வலையில் மீன்களை நிரப்புவதற்கு இப்படிப்பட்ட அவருடைய வழிநடத்துதல் மிக அவசியமாய் இருக்கிறது.

இயேசு நாசரேத்தை விட்டு கப்பர்நகூமுக்குச் சென்று, கலிலேயாவில் உள்ளவர்களை தம்முடைய சீஷர்களாக தேர்வு செய்த காரணம் ஆர்வமூட்டக்கூடியதாய் இருக்கிறது. கலிலேயாவிலுள்ள பகுதியில் இயேசு நல்ல நிலத்தை கண்டு பிடித்தார். (இருதயத்தில் எளிமையுள்ளவர்கள், ஆவிக்குரிய பசிதாகமுள்ளவர்கள்) சுவிசேஷத்தை விதைக்கவும், அவருடைய முயற்சிகள் பெருகுவதற்கும் ஏற்ற நிலமாய் இருந்தது. இயேசுவின் துவக்ககால ஊழியங்கள், மற்ற நேரங்களைக் காட்டிலும் வல்லமையுள்ள பாடங்களைப் புகட்டுவதற்கு இயேசு நடப்பித்த வார்த்தையற்ற பிரசங்கங்கள் அதிகமாக இருந்தது.


இயேசு அற்புதமான பாடங்களைக் கற்பிப்பதற்காக பயன்படுத்தின இடங்கள், ஒரு அழகான இயற்கையாக மட்டுமல்ல, அது ஒரு பாடசாலையாகவும் பயன்படுத்தினார். எல்லா உபத்திரவங்களிலும், எதிர்பாராமல் நடக்கக்கூடிய சம்பவங்கள் மத்தியிலும் அவருடைய பிரசங்கத்தை உணர்வதற்கான நம்பிக்கையை இந்த பாடங்கள் வழியாக நமக்கும், சீஷர்களுக்கும் கற்றுக் கொடுத்தார்.

அந்த கடலில் இயேசு செய்த பயணத்தின் வரைப்படத்தைக் காணும்போது, இயேசு தம்முடைய ஊழியத்தை அந்த சிறிய படகை பயன்படுத்தி, அந்த சீஷர்களை ஆவிக்குரிய வேலைகளுக்குள் எவ்வாறு நடத்தினார் என்பதைக் காணலாம். இயேசு தம்முடைய சீஷர்களோடு வெகு சீக்கிரத்தில் ஒவ்வொரு கிராமமாகச் சென்று பல அற்புதங்களை நடப்பித்து, தேவனுடைய இராஜ்யத்தைப் பிரசங்கித்தார். இயேசு தம்முடைய சீஷர்களோடு நடைப்பயணமாக இவ்வளவு விரிவான எல்லையை பயணித்திருப்பது இயலாத காரியமாக இருந்திருக்கக்கூடும்! ஆகவே, கெனேசரேத்து, அங்கு ஆண்டவரின் ஊழியத்திற்கு சிறந்த வாகனமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், இயேசு தம்முடைய பயணங்களில் சோர்வடையும்போது, அச்சிறிய படகு அவர் ஓய்வெடுக்கவும் பயன்பட்டது. மேலும் தனிமையில் தன்னுடைய விசேஷித்த சீஷர்களுக்கு அருமையான பாடங்களைக் கற்றுக் கொடுக்கக்கூடிய நல்ல வாய்ப்புகளையும் ஏற்படுத்தி தந்தது.

**மேசியாவின் இரகசியம்**

பத்து சம்பவங்களுக்கு மேலாக இயேசு தான் செய்த அற்புதங்களை இரகசியமாக வைக்கும்படி கேட்டுக்கொண்டார். இவை அனைத்தையும் முதல் 9 அதிகாரங்களில் காணலாம். சாத்தானின் கூட்டமாகிய லேகியோனிடமிருந்து சொஸ்தப்படுத்தப்பட்ட மனுஷனிடம் - "நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்" (மாற். 5:19) என்று இயேசு கூறின இச்சம்பவம் மட்டுமே முரண்பாடாகக் காணப்படுகிறது.

மூன்று கேள்விகள் எழுப்பப்படுகிறது. இயேசுவின் கலிலேயா ஊழியத்தில் அவர் செய்த அற்புதங்களை இரகசியமாக வைத்திருக்கும்படி அவர் விண்ணப்பித்ததின் காரணம் என்ன? இவைகள் மாற்கு எழுதின சுவிசேஷத்தில் மட்டும் பதிவு செய்யப்பட்டிருக்கும் காரணம் என்ன? இயேசு இரண்டு



சவாலான விண்ணப்பங்களை முன் வைத்த காரணம் என்ன?

இயேசுவின் உவமைகளுக்கு நிழலான மற்றும் நடைமுறை விளக்கங்கள் இருப்பதுபோல, அவர் செய்த அற்புதங்களுக்கும் காணப்பட்டது. எடுத்துக்காட்டாக, பிசாசு கூட்டமாகிய லேகியோனால் பாதிக்கப்பட்ட மனுஷன், இயேசுவினால் சொஸ்தப்படுத்தப்பட்டபோது, தெக்கப்போலிக்குச் சென்று, தங்களுடைய நண்பர்களிடத்தில் நடந்ததை அறிவிக்கும்படி இயேசு கூறினார். இப்பட்டணம் இஸ்ரயேலில் இராததினால், இயேசு அற்புதம் செய்த இக்காரியம் அவர்களைச் சென்று அடையும்படி இயேசு இப்படியாகக் கூறினார். ஏனெனில், இப்பட்டணம் கெனேசரேத்துக்கு அப்புறம் இருந்ததினால் சுகம் அளிக்கப்பட்ட அந்த மனுஷன் இஸ்ரயேலில் இயேசு செய்த ஊழியத்திற்கு ஒரு சாட்சியாக இருந்திருக்கக்கூடும்.

இயேசு இரகசியமாக வைத்திருக்கும்படி நடப்பிக்கப்பட்ட பத்து அற்புதங்கள் பெரும்பாலும் தேவனால் இரக்கம் பெற்ற யூதர்கள் மத்தியில் இஸ்ரயேலில் நடப்பிக்கப்பட்டது. நடைமுறையில். பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களின் கவனத்தைத் திருப்பாத வண்ணம் இயேசு இவைகளை இரகசியமாக வைத்திருக்கும்படி சொல்லியிருக்க வேண்டும். ஏனெனில், அவர் சிலுவையில் அறையப்படும் காலத்திற்குள் செய்ய வேண்டிய மிக

| குறிப்பு | அற்புதம்(அ) சம்பவம் | இயேசு கூறின காரியம் |
|---|---|---|
| மாற். 1:34 | பிசாசுகளை விரட்டுதல் | "பிசாசுகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை." |
| மாற். 1:43, 44 | குஷ்டரோகியை சொஸ்தப்படுத்துதல் | "நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு; ஆயினும் நீ போய், ஆசாரியனுக்கு உன்னைக் காண்பி." |
| மாற். 3:12 | பிசாசுகளை துரத்துதல் | "தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடி அவைகளுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்." |
| மாற். 5:19 | லேகியோனை விரட்டுதல் | "கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்." |
| மாற். 5:43 அவர்களுக்கு | ஜெப ஆலயத்தலைவனின் மகளை | "அதை ஒருவருக்கும் அறிவியாதபடி உயிரோடு எழுப்புதல் உறுதியாகக் கட்டளையிட்டார்." |
| மாற். 7:24 | தீருவுக்கு செல்லுதல் | "ஒருவரும் அதை அறியாதிருக்க..." |
| மாற். 7:36 | காது கேளாதோரை சுகப்படுத்துதல் | "அதை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்." |
| மாற். 8:26 | குருடரை பார்வையடையச் செய்தல் | "நீ கிராமத்தில் பிரவேசியாமலும், கிராமத்தில் இதை ஒருவருக்கும் சொல்லாமலும் இரு" |
| மாற். 8:30 | நீரே கிறிஸ்து | "அவர்: ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு அவர்களுக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார்." |
| மாற். 9:9 | மறுரூபப்படுதல் | "அவர் அவர்களை நோக்கி: ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்." |
| மாற். 9:30 | கலிலேயாவின் வழியாக பயணித்தல் | " அவர் அதை ஒருவரும் அறியாதிருக்க வேண்டுமென்று விரும்பினார்." |

முக்கியமான அறுவடை வேலைகள் அதிகமாய் இருந்தது. மேலும், "ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம்" (கொலோ. 1:26) என்று வசனம் இயேசுவின் அற்புதங்களின் விதத்தைக் குறித்து நமக்கு நினைப்பூட்டுகிறது. ஒருவேளை யூத யுகத்தில் தேவ ஜனங்களின் மத்தியில் நடைபெற்ற இந்த பத்து அற்புதங்களும், சுவிசேஷ யுக சபையில் நடைபெறும் சில நிஜமான அற்புதங்களுக்கு - குருடராய் இருக்கக்கூடிய ஆவிக்குரிய பார்வையைப் பெறுதல், ஆவிக்குரிய காதுகளைப் பெறுதல், கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனைப் பெறுதல்:- இன்னும் பல! போன்றவைகளுக்கு நிழலாய் இருக்கக்கூடும்.

* இயேசுவின் முதல் வருகைக்கான காரணத்திற்கு நான்கு நோக்கங்கள் இருந்தது. நியாயத்தீர்ப்பு, அறுவடை, பலி மற்றும் சுவிசேஷ யுகத்தை துவக்கி வைப்பது. ஆயினும், இயேசுவின் அற்புதங்கள் சுவிசேஷ யுகத்தின் துவக்கத்தையும், அறுவடையை மட்டுமே வலியுறுத்துவதாகத் தோன்றுகிறது. மேலும், நீண்ட காலமாய் எதிர்பார்த்த மேசியா இவர் தான் என்பதை தம்முடைய சீஷர்களுக்கு சந்தேகத்திற்கு இடமின்றி அவருடைய அற்புதங்கள் நிரூபித்தது. இயேசுவின் அற்புதங்களின் விளைவாக அவருடைய மேலோங்கின புகழ்ச்சி விரைவாக பரவி அவருடைய அறுவடையின் வேலைகள் அதிகமாக ஊக்குவிக்கப்பட்டது. ஆகவே, இயேசு தம்முடைய வேலையின் துவக்கத்தில் கலிலேயா ஊழியத்தில் வெற்றி பெறும்படியாக இந்த முக்கிய காரியங்கள் அமைந்தது.

கலிலேயா ஊழியத்தில் மட்டுமே இயேசு செய்த அற்புதங்களை இரகசியமாக வைத்திருக்கும்படி சொன்ன காரியம் என்ன? ஒருவேளை தம்முடைய சீஷர்களின் இருதயத்தில் சுவிசேஷத்தின் மேலுள்ள விசுவாசம் வளர்ச்சியடைவதற்கான துவக்க நிலையில் இவ்வாறு கூறினது அவசியமாக இருந்திருக்கும். மிகப் பெரிய ஜனக்கூட்டத்திலிருந்து தம்முடைய சீஷர்களைப் பிரித்தெடுத்து, அந்த சிறிய படகில் அவர் விசேஷித்த பாடங்களை இரகசியமாகப் போதித்தது போல, இந்த அற்புதங்களையும் இரகசியமாக வைக்கும்படி கூறியிருக்க வேண்டும். (மாற். 4:1) இயேசு மற்றும் அவருடைய சீஷர்கள் கலிலேயாவில் ஓய்வின்றி ஊழியம் செய்து கொண்டிருந்ததினால், அவர்களுக்கு அவ்வப்பொழுது இளைப்பாறுதல் தேவைப்பட்டது. யோவான் ஸ்நானகன் கொலை செய்யப்பட்ட பின் தம்முடைய சீஷர்களை சற்று நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி இயேசு பேசின வார்த்தைகளை மாற்கு பதிவு செய்திருக்கிறார். "வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார்; ஏனெனில், வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால் போஜனம்பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது." (மாற். 6:31) ஒவ்வொரு இரவும் பகலும் தொடர்ச்சியாக இயேசுவை காண்பதற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே, இயேசு செய்த காரியங்களை இரகசியமாக வைக்கும்படி சொன்ன காரியம் அவரைப் பற்றிய கீர்த்தி மேலும் அதிகமாக பரவ வேண்டாம் என்று இதினிமித்தம் இயேசு எண்ணியிருக்கலாம்.

**பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களின் விமர்சனங்கள்**

இயேசுவின் கலிலேயா அற்புதங்களின் பலனாக பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள், ஜனங்கள் மேல் தாங்கள் கொண்டிருந்த மதக் கட்டுப்பாட்டை இழந்து கொண்டிருந்தார்கள். பொதுவான அந்த ஜனக்கூட்டம் ஒரு புதிய விசுவாசத்தையும் தங்களுடைய வாழ்க்கைக்கான நம்பிக்கையுள்ள வார்த்தைகளையும் இயேசு நடப்பித்த அற்புதங்கள் நிரூபிக்கப்பட்ட "இயேசுவே மேசியா" என்பதற்கான நிரூபணங்களையும் கண்டுபிடித்தார்கள். இயேசுவின் ஊழியத்தின் முடிவில் பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள் அங்கு ஏற்பட்ட புரட்சியை எதிர் நோக்குவதற்கு உதவியற்றவர்களாய் நின்றார்கள். பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள் இயேசுவின் கலிலேயா ஊழியத்தின் போது, நான்கு முறைகள் தங்களுடைய விமர்சனத்தை இயேசுவுக்கு எதிராகவும், மற்ற மூன்று முறைகள் சீஷர்களுக்கு எதிராகவும் நடத்தியதை கீழ்க்காணும் வரிசையில் காணலாம்.

| குறிப்பு | விமர்சனம் | இயேசுவின் பதில் |
|---|---|---|
| மாற். 2:10 | இயேசு பாவங்களை மன்னிப்பவர் குமாரனுக்கு | "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ அதிகாரம் உண்டு." |
| மாற். 2:17 | இயேசு பாவிகளோடும், ஆயக்காரர் களோடும் புசித்தார் | "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்." |
| மாற். 2:19 | உபவாசிக்க வேண்டிய மணவாளனுடைய அவசியமில்லை | "மணவாளன் தங்களோடிருககையில் தோழர் உபவாசிப்பார்களா?" |
| மாற். 2:27, 28 உண்டாக்கப | ஓய்வு நாளில் வேலை செய்தல் | "மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்பட வில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக பட்டது; ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்." |
| மாற். 3:4 | ஓய்வு நாளில் சொஸ்தப்படுத்தல் | (இயேசு)"ஓய்வுநாட்களில் நன்மை செய்வதோ, தீமைசெய்வதோ, ஜீவனைக் காப்பதோஅழிப்பதோ, எது நியாயம்." |
| மாற். 3:26 | பெயெல்செபூலினால் பிசாசுகளை துரத்தல் | (இயேசு)"சாத்தான் தனக்குத்தானே விரோதமாக எழும்பிப் பிரிந்திருந்தால், அவன் நிலைநிற்கமாட்டாமல், அழிந்துபோவானே" |
| மாற். 7:8 | சீஷர்கள் தங்கள் கைகளை கழுவவில்லை கைக்கொண்டுவருகிறீர்கள்." | "நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் |

இயேசுவுக்கு எதிராக சாட்டப்பட்ட அதிகமான குற்றச்சாட்டுகள் யூதர்கள் நியாயப்பிரமாணத்தை அவர் மதிக்கவில்லை என்று காரணம் காட்டப்பட்டது. இது, ஓய்வு நாளை அநுசரிப்பததைக் குறித்தும், பொது ஜனங்களோடு வைத்திருக்கும் தொடர்பைக் குறித்தும். சுத்திகரிப்பைக் குறித்தும் குற்றம் சாட்டப்பட்டது. "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரி யானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம்" (யாத். 20:8-10) என்று ஓய்வு நாளில் ஓய்வு எடுக்க வேண்டும் என்ற சட்டப்பூர்வமாக பரிசேயர்களும், சதுசேயர்களும் கூறினார்கள். அவர்களின் மனுஷத்தன்மைகுரிய நிலையும், தங்களுடைய இருதயத்தில் உறுதியான குருட்டாட்டமும், ஜனங்கள் மேலிருந்த ஓய்வு நாளுக்குரிய பாரங்களை இயேசு அகற்றிக்

கொண்டிருப்பதைக் காண்பதற்கு தடை செய்தது. இயேசு பெற்றிருந்த தெய்வீக அதிகாரத்தின் வல்லமை மிகப் பெரிய ஆதாரமாக இருந்ததினால், அவர்களினால் அவர் செய்த காரியங்களை அவர்களால் காணமுடியாதிருந்தது.

இயேசுவே தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்வது யூதயுக அறுவடையில் வைக்கப்பட்ட சோதனையாக இருந்தது. இந்த முக்கியமான சோதனையில் பரிசேயர்களும், சதுசேயர்களும் தோல்வியடைந்தார்கள். ஆனால், சீஷர்கள் அதில் தேர்வு பெற்றார்கள் என்பதற்கான ஆதாரத்தை இயேசு எழுப்பின நேரடியான கேள்விக்கான பதிலாக, மாற். 8:29-ம் வசனத்தில் காணலாம். ஆயினும், சங். 103:3 - "அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி," என்ற தீர்க்கதரிசனத்தின்படி, சில பரிசேயர்கள் இயேசுவை வல்லமை பொருந்தினவராகக் கண்டார்கள். ஆகவே, இயேசு செய்த அற்புதங்கள் அடிப்படையாக அறுவடை வேலைக்காக மட்டுமே என்று தோன்றினாலும், அவர்கள் யூத தலைவர்கள் மேசியாவை புறக்கணித்ததினால், தேவனுடைய நியாயத்தீர்ப்பு துவங்குவதற்கு அது ஏதுவாக இருந்தது.

**தெக்கப்போலியாவில் காதுகேளாத ஒரு மனுஷனை சுகப்படுத்துதல்**

"மறுபடியும், அவர் தீருசீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்டுப் புறப்பட்டு, தெக்கப்போலியின் எல்லைகளின் வழியாய்க் கலிலேயாக் கடலருகே வந்தார். அங்கே கொன்னைவாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அப்பொழுது, அவர் அவனை ஜனக்கூட்டத்தை விட்டுத் தனியே அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு; வானத்தை அண்ணாந்துபார்த்து, பெருமூச்சுவிட்டு: எப்பத்தா என்றார்; அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம். உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான். அதை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்; ஆகிலும் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்கள் அதைப் பிரசித்தம் பண்ணி, எல்லாவற்றையும் நன்றாய்ச் சொய்தார்; செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும்பண்ணுகிறார் என்று சொல்லி, மேன்மேலும் ஆச்சரியப்பட்டார்கள்." (மாற். 7:31-37)

பிசாசுகளின் கூட்டமாகிய லேகியோனிடமிருந்து ஒரு மனுஷனை அற்புதவிதமாக சொஸ்தப்படுத்தி, தெக்கப்போலியாவில் தம்முடைய நண்பர்களிடம் அதை அறிவிக்கும்படி அந்த மனுஷனை இயேசு அனுப்பின அந்த காரியத்தின் விளைவாக தெக்கப்போலியாவில் உள்ள ஜனக்கூட்டத்தார் செவிடனாக இருந்த அந்த மனுஷன் மேல் கைகளை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். (மாற். 7:32) ஆனால், நம்முடைய ஆண்டவரோ, அதைகாட்டிலும் அதிகமான காரியங்களைச் செய்தார். "அப்பொழுது, அவர் அவனை ஜனக்கூட்டத்தை விட்டுத் தனியே அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு;" (மாற். 7:33) அந்த மனுஷனோடு இயேசு தனித்திருக்கும்படி விரும்பினார். அதற்கு முன்னதாகவே அந்த மனுஷன் தனித்திருந்தார். இயேசு அந்த மனுஷனோடு ஒரு விசேஷித்த செய்கை காட்டும் முறையில் அவரோடு தொடர்பு கொண்டார். அந்த மனுஷனுடைய வேதனை நிறைந்த தனிமையான சூழ்நிலையில் இயேசு கிரியை செய்ததைக் காணலாம். இயேசு, தேவனை

அன்னாந்து பார்த்த காரியம், அது தெய்வீக வல்லமையினால் சுகப்படுத்தப்பட்டதை சாட்சியிடுகிறது.. இந்த ஒரே அற்புதமானது உண்மையில், பார்வையற்ற மனுக்குலத்திற்கு ஆவிக்குரிய பார்வையைக் கொடுத்து, கேளாத செவியுடையவர்களுக்கு தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கும்படியான திறனைக் கொடுத்து தேவனோடு தொடர்பு கொள்வதற்கும், அவரை ஆராதிப்பதற்கும் பரிசுத்தமான நாவுகளைக் கொடுக்கக்கூடிய இரண்டாம் ஆதாமின், வேலைகளின் அழகான சித்திரமாகும். அவர் இந்த உலகத்தின் மனுக்குலத்தை தேவனோடு ஒருமனப்படச் செய்து, அவர்களை தேவனோடு மீண்டும் ஒப்புரவாக்குவார்.

துவக்கத்தில் பார்வையற்ற நிலை, காது கேளாத நிலைமையைக் காட்டிலும் மோசமாகத் தோன்றலாம். ஆயினும், உடல் ரீதியான ஆய்வில், குருடரைக் காட்டிலும் செவிடர் அதிகமாக உபத்திரவப்படக்கூடியவர்கள் என்று காணப்படுகிறது. காது கேளாதோர் எப்பொழுதும் யாரும் உணராத ஒரு தனிமையை உணரக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அர்த்தமுள்ள உறவுகளையும் இழக்க வேண்டியதாய் இருக்கிறது. செவி திறனற்றவர்கள் பேசவும் இயலாதவர்களாய் காணப்படுகிறார்கள். ஏனெனில், ஒருவர் என்ன பேசுகிறார் என்று அறிந்தால் மட்டுமே அவரால் பதில் கூறமுடியும். இவர்கள் எப்பொழுதும் அமைதியான தனிமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தனிமை அவர்களுடைய இருதயத்தில் கசப்பையும், மனதில் துயரத்தையும் ஏற்படுத்துகிறது.

தெக்கப்போலியாவில் சொஸ்தமாக்கப்பட்ட அந்த மனுஷன், தனிமை என்ற சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, மனித உறவுகள் என்ற வட்டத்திற்குள் சேருவதற்கு அனுமதிக்கப்பட்டார். இயேசுவின் எல்லா கிரியைகளும் எப்பத்தா என்று பயன்படுத்தப்பட்ட அராமிக் வார்த்தையில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. எப்பத்தா என்பதற்கு திறக்கப்படுவாயாக என்பது பொருள். இயேசு, "திறக்கப்படுவாயாக" என்று கூறினாரே தவிர, "உன் செவிகள் திறக்கப்படும்" என்று கூறவில்லை. ஆகவே, உண்மையில் அந்த முழு மனுஷனே வியாதியஸ்தனாக இருந்திருக்க வேண்டும். இயேசு அந்த மனுஷனை சுகப்படுத்தின விளைவு அங்கு உடனடியாகக் காணப்பட்டது. "உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான்." (மாற். 7:35) அங்கு கூடியிருந்த ஜனக்கூட்டம் மிகச் சரியாக காரியங்களை கனித்தது. "எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்; செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும்பண்ணுகிறார் என்று சொல்லி, மேன்மேலும் ஆச்சரியப்பட்டார்கள்." (மாற். 7:37) இந்த வார்த்தைகள் ஆதியாகம புஸ்தகத்தை எதிரொலிக்கிறது. "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது." (ஆதி. 1:31) ஆம், அது ஆயிரவருட ஆட்சியாய் இருக்கும். ஒவ்வொருவரும் ஒரு புதிய துவக்கத்தைப் பெறுவார்கள். மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் இயேசுவினிடத்தில் சுகம் பெறுவார்கள். (ஒரே தொனியில், ஒரே மொழியில் அனைவரும் தேவனை சேவித்து, மனித நல் உறவுகளுக்குள் இந்த முழு மனுக்குலமும் ஒரு புதிய காலத்திற்குள் பிரவேசிக்கும்.) (செப். 3:9)

**முடிவுரை**

பேசப்பட்டதும், பேசப்படாததுமான முழுமையான பாடங்களை இயேசுவின் கலிலேயாவின் ஊழியம் கொண்டிருக்கிறது. இயேசு ஞானஸ்நானம் பெற்று வனாந்தரத்தில் சோதிக்கப்பட்ட பின், மனுஷரைப் பிடிக்கும் வேலையை இயேசு மையப்படுத்தினார். இந்த வேலையை அவர் துவங்குவதற்கு இயேசு கலிலேயாவுக்குச் சென்றார். அவருடைய கலிலேயா ஊழியத்தில், அவரே சிறந்த மீன் பிடிப்பவராக இருந்து, மீன் பிடிப்பதற்குரிய சரியான

இடத்தை தேர்வு செய்து, சுவிசேஷ யுகம் முழுவதிலும் இருக்கும் சபையை போஷிக்கும்படியாக ஒரு ஊழியத்தை வளர்ச்சியடையச் செய்தார். அற்புதமான அவருடைய கிரியைகளையும், வல்லமையான அவருடைய வார்த்தைகளையும் அவர் எடுத்த முடிவுகளை ஆராய்வதின் மூலம், இயேசுவின் கலிலேயாவின் ஊழியத்தைக் குறித்து அநேக காரியங்களைக் கற்றுக் கொள்ளலாம். கலிலேயாவில் அவர் வாழ்ந்த வாழ்க்கைக்குள் அதிகமதிகமான ஞானத்தையும், உபதேசங்களையும் குவித்து வைத்திருக்கிறார். இவைகள் அனைத்தும் அவருடைய ஊழியத்தில் மறைந்திருப்பதைக் கண்டறியலாம்.

இயேசுவின் அற்புதங்களையும், அவருடைய ஊழியத்தில் அவரே மேசியா என்பதற்கு நிரூபிக்கக்கூடிய தீர்க்கதரிசனங்களையும் நாம் பார்க்கும்பொழுது, அவர் தம்முடைய கலிலேயா ஊழியத்தில், இந்த முழு உலகத்தையும் வருங்காலத்தில் சுகப்படுத்துவதற்கு ஒரே மாதிரியாக இக்காரியங்களை நடப்பித்தார் என்று அறிந்து கொள்ளலாம். தெக்கப்போலியாவில் ஒரு மனுஷனை அற்புதமாய் சுகப்படுத்தின நிழலானது ஏசாயா தீர்க்கதரிசனத்தில் அருமையாக வாக்களிக்கப்பட்ட நிஜமாகும். "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்." (ஏசா. 35:5, 6)

# கிறிஸ்துவின் இறுதி வாரம்



"இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; அங்கே மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, புறத்தேசத்தாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்." (மாற். 10:33)

**Homer Montague**

மாற்கு எழுதின சுவிசேஷத்தின் இறுதி ஐந்து அதிகாரங்கள், கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி வார்த்தை விவரிக்கிறது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனத்தின் நிறைவாக யூதர்களின் மேசியா என்று தன்னைத்தான் அறிமுகப்படுத்துவதற்கு எருசலேமுக்குள் ஆரவாரத்தோடு இயேசு வந்தபோது, அந்த வாரம் துவங்கியது. "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்." (சக. 9:9)

இயேசுவின் இரண்டு சீஷர்கள், ஒரு கழுதை குட்டியைப் பிடித்து வந்தபின், இயேசு அதின் மேல் அமர்ந்து வஸ்திரங்களும், மரக்கிளைகளும் விரிக்கப்பட்ட தரைவிரிப்பின் மேல் அவர் எருசலேம் பட்டணத்திற்குள் பவனி வந்தார் என்பதை மாற்கு 11-ம் அதிகாரம் குறிப்பிடுகிறது. அவரை கண்ட பார்வையாளர் அனைவரும், அவரை ஒரு இராஜாவை போல் கண்டு, "ஓசன்னா" என்று ஆரவாரித்தார்கள். அதற்கு பின், அவர் தேவாலயத்திற்குள் பிரவேசித்து, அதை சுற்றிப்பார்த்த பின், மாலையில் பெத்தானியாவுக்கு திரும்பினார்.

மறுநாளிலே அவர் மீண்டும் எருசலேமுக்குச் செல்லும்பொழுது, ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதில் கனிகள் உண்டா என்று தேடினார். அதில் வெறும் இலைகளை மட்டும் அவர் கண்டதினால், அந்த அத்திமரத்தை அவர் சபித்தார். இஸ்ரயேல், அத்திமரத்திற்கு ஒப்பிடப்பட்டிருப்பதை அடையாளமாகக் கொண்டு, இந்த சம்பவத்திலிருந்து ஒரு பாடம் கற்பிக்கப்படுகிறது. (ஓசி. 9:10) இலைகள் மட்டும் உள்ள அந்த மரம், தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருப்பது போல தோற்றம் அளிக்கக்கூடிய இஸ்ரயேல் ஜாதியை அடையாளப்படுத்துகிறது. ஆயினும், புறஜாதிகளின் நிறைவாகிய சபை முழுமை பெறும் வரையில், இஸ்ரயேல் தேசம் கனி கொடுக்காது. (ரோ. 11:25-27)

இயேசு ஆலயத்திற்குத் திரும்பி வந்து அதை அசுத்தப்படுத்தின காசுக்காரர்களின் மேஜைகளையும், புறா விற்கிறவர்கள், பரப்பி வைத்திருந்த கடைகளையும் கவிழ்த்துப் போட்டார். இயேசு செய்த இந்த கிரியைகள், இயேசுவை அழித்துவிட வேண்டும் என்று ஆலோசனை செய்த பரிசேயர் மற்றும் பிரதான ஆசாரியர்களின் இருதயத்தில் மிகுந்த பயத்தை ஏற்படுத்தியது.

அத்திமரத்தை இயேசு சபித்ததைத் தொடர்ந்து, தம்முடைய சீஷர்களுக்கு விசுவாசத்தை செயல்படுத்துவதின் மூலமாக பெறக்கூடிய ஜெபத்தின் வல்லமையை வலியுறுத்தி, ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுத்தார். நடைமுறைக்கு இயலாத காரியங்களானாலும், தேவனுடைய சித்தத்திற்கு இசைந்திருக்கும் பட்சத்தில், அது எளிதாக நிறைவேற்றப்படும் என்று இயேசு கற்பித்தார். (மாற். 11:20-26) அவர் ஆலயத்திற்கு வந்தபோது, மீண்டும் மூப்பர்களும், பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும் எருசலேமுக்குள் ஆரவாரத்தோடு பிரவேசித்தல், ஆலயத்தை சுத்திகரித்தல், போன்ற பல காரியங்களை எந்த அதிகாரத்தில் அவர் செய்தார் என்ற கேள்வி எழுப்பினார்கள். இயேசு அவர்களுடைய கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காமல், யோவான் ஸ்நானனைக் குறித்து இது பரத்திலிருந்து வந்ததா அல்லது மனுஷனால் உண்டானதா என்ற கேள்வியை அவர்களிடம் கேட்டார். யேவானின் ஊழியத்தை தேவன் அங்கிகரித்தார் என்று அவர்கள் ஒத்துக் கொண்டால், மனந்திரும்ப வேண்டும் என்று அவர் கூறின ஆலோசனையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணினார்கள். அதேநேரத்தில் அவருடைய ஊழியம் மனுஷரால் ஏற்பட்டது என்று கூறினால், யோவான் ஸ்நானனை தேவனுடைய தீர்க்கதரிசயாக எண்ணிக் கொண்டிருக்கும் பொது மக்களின் பகையை பெற வேண்டியதாய் இருக்கும் என்று எண்ணினார்கள். இக்காரணத்தினிமித்தம், ஆண்டவருடைய கேள்விக்கு அவர்களால் பதிலளிக்க முடியவில்லை. ஆகவே, இயேசு தாம் எந்த அதிகாரத்தில் இக்காரியங்களைச் செய்கிறார் என்ற அவர்களின் கேள்விக்குப் பதில் அளிக்க மறுத்துவிட்டார். (மாற். 11:27-33)

**பன்னிரண்டாம் அதிகாரம்**

உவமைகளைப் பயன்படுத்தி யூதமத தலைவர்களை தேள் கொட்டுவதைப் போல குற்றம் சாட்டுவதோடு நம்முடைய ஆண்டவரின் கடைசிவார ஊழியம் இந்த அதிகாரத்தில் துவங்குவதைக் காணலாம். இயேசு அவர்களிடம் உருவக கதைகளைக் கூறினதினால் யூதமத தலைவர்கள் அவைகளின் விளக்கங்களை அறிந்திருந்த போதிலும் தேவனுடைய குமாரனாக அவரை புறக்கணித்ததினிமித்தம் அவர்கள் குற்ற உணர்வோடு காணப்பட்டார்கள். "பின்பு அவர் உவமைகளாய் அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினதாவது: ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலியடைத்து, இரசத்தொட்டியை உண்டுபண்ணி, கோபுரத்தையும் கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாக விட்டு, புறத்தேசத்துக்குப் போயிருந்தான். தோட்டக்காரரிடத்தில் திராட்சத் தோட்டத்துக் கனிகளில் தன் பாகத்தை வாங்கிக்கொண்டுவரும்படி, பருவகாலத்திலே அவர்களிடத்தில் ஒரு ஊழியக்காரனை அனுப்பினான். அவர்கள் அவனைப் பிடித்து, அடித்து, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள். பின்பு வேறொரு ஊழியக்காரனை அவர்களிடத்தில் அனுப்பினான்; அவர்கள் அவன்மேல் கல்லெறிந்து, தலையிலே காயப்படுத்தி, அவமானப்படுத்தி, அனுப்பிவிட்டார்கள். மறுபடியும் வேறொருவனை அனுப்பினான்; அவனை அவர்கள் கொலைசெய்தார்கள். வேறு அநேகரையும் அனுப்பினான்; அவர்களில் சிலரை அடித்து, சிலரைக் கொன்றுபோட்டார்கள். அவனுக்குப் பிரியமான ஒரே குமாரன் இருந்தான்; என் குமாரனுக்கு அஞ்சுவார்களென்று சொல்லி, அவனையும் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பினான். தோட்டக்காரரோ: இவன் சுதந்தரவாளி, இவனைக் கொலைசெய்வோம் வாருங்கள்; அப்பொழுது சுதந்தரம் நம்முடையதாகும் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு;" (மாற். 12:1-7)

மேற்கண்ட வசனப்பகுதியில் இஸ்ரயேலர்களுக்கு ஒரு வீட்டை ஸ்தாபித்து, அவர்களை சுற்றியிருக்கும் புறதேசத்தாரிலிருந்து அவர்களை பிரித்து வைப்பதற்காக பல தீர்க்கதரிசிகளின் மூலமாக தெய்வீக பிரமாணத்தை தேவன் தாமே அவர்களுக்குக் கொடுத்திருந்தார். இப்படியாக நேர்த்தியான பராமரிப்பினாலும், தேவனுடைய அன்பான வழிநடத்துதலினாலும், தேவனுக்கு யூதர்கள் கீழ்ப்படிந்திருந்தால், யூதர்கள் இயேசுவை தங்களுடைய மேசியா என்று ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தப்பட்டிருப்பார்கள். தேவனுடைய பிரமாணத்தையும், நீதியுள்ள தீர்க்கதரிசிகள் மூலமாக கொடுக்கப்பட்ட எச்சரிப்புகளையும், புறக்கணிப்பதற்கு இஸ்ரயேல் ஜாதி கொண்டிருந்த அதே இருதய கடினத்தினால், இயேசுவை மறுதலித்து அவரை சிலுவையில் அறையும்படி வழி நடத்தியது. மேலும், ஆண்டவரின் வார்த்தைகளை யூதமத தலைவர்கள் நன்கு புரிந்திருந்தார்கள் என்பதற்கான ஆதாரமாகவும் இது இருந்தது. ஏனெனில், "இந்த உவமையைத் தங்களைக் குறித்துச்சொன்னாரென்று அவர்கள் அறிந்து, அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆனாலும் ஜனத்துக்குப் பயந்து, அவரை விட்டுப் போய்விட்டார்கள்" (மாற். 12:12) என்று நாம் வாசிக்கிறோம்.

உயிர்த்தெழுதலை விசுவாசியாத கல்வி கற்ற யூத வகுப்பாராகிய சதுசேயர்களின் எதிர்ப்புக்கும் இயேசு பதிலளித்தார். இவர்கள் மோசேயின் நியாப்பிரமாணத்தை குறிப்பிட்டார்கள். (உபா. 25:5-10) சந்தானம் இல்லாமல் ஒரு மனுஷன் மரித்துப் போனால் அந்த விதவையை மரித்துப் போன மனுஷனுடைய சகோதரன் திருமணம் செய்து, குடும்ப பெயரை நிலைநிறுத்த வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறியிருக்க, ஒரு ஸ்திரீ ஒருவருக்குப் பின் ஒருவராக - ஏழு பேரை திருமணம் செய்து சந்தானம் இல்லாமல் மரித்துப் போனாள். உயிர்த்தெழுதலில் அவள் யாருக்கு மனைவியாக இருப்பாள் என்று அவர்கள் இயேசுவிடம் கேள்வி எழுப்பினார்கள். மரித்த அனைவரையும் தேவன் உயிர்த்து எழுப்புவதற்கு வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்று அவர்களுக்கு வலியுறுத்தினார். மேலும், தேவனுடைய இராஜ்யத்தில் திருமணங்களும் நடக்கப்போவதில்லை என்று கூறினார். ஏனெனில், மனுஷருக்காக வடிவமைக்கப்பட்ட இந்த பூமியானது, தேவனுடைய இராஜ்யம் பகிரங்கமாக ஸ்தாபிக்கப்படும்போது, முழுமையாக பலுகி பெருகி நிரப்பப்பட்டிருக்கும். கூடுதலாக, இனிவரும் உயிர்த்தெழுதலுக்கு மேலும் ஆதாரமாக எரியும் முட்செடியில் மோசேக்கு பரலோக பிதா தம்மை ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவன் என்று தம்மை அறிமுகப்படுத்தினதை இயேசு சதுசேயர்களுக்கு நினைப்பூட்டினார். ஏனெனில், மரித்தோரின் உயிர்த்தெழுதல் இராவிட்டால், தேவன் வாக்குத்தத்தம் செய்ததை யாரிடம் கொடுப்பார்?

சதுசேயருக்கு ஆண்டவர் அளித்த பதிலைக் கேட்ட ஒரு வேதபாரகன் அதை புரிந்து கொண்டவராக இயேசுவினிடம் பிரமாணங்களில் எது பிரதானமானது

என்று விசாரித்தார். நம்முடைய ஆண்டவர் மோசேயின் வார்த்தைகளை மீண்டும் மேற்கோள் காட்டினார். (உபா. 6:4, 5; லேவி. 19:18)

அந்த வேதபாரகன் தேவனை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அன்பு செய்து தன்னை நேசிப்பதுபோல பிறனையும் நேசிக்க வேண்டும் என்று கூறி தன்னுடைய உண்மையான இருதயத்தை வெளிப்படுத்தினார். "நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல" (மாற். 12:34) என்று கூறி இயேசு அவர்களுடைய இருதயத்தின் சரியான நோக்கத்தை அங்கீகரித்தார்.

பொதுவாக வேதபாரகர்கள் வெளிப்புறமாக பக்தியின் வேஷத்தைத் தரித்து தங்களுக்கு மேன்மை உண்டாகும்படிக்கு விதவைகளை பட்சித்து, தங்களுடைய வேஷத்தை நீண்ட ஜெபங்களைக் கொண்டு நிரூபித்தார்கள். அவர்கள் தங்களுடைய நிறைவிலிருந்து ஆலயத்திற்கு காணிக்கை செலுத்தினாலும், இரண்டு காசுகளை உண்டியில் போட்ட விதவையை இயேசு மெச்சிக் கொண்டார். அதிகமான காணிக்கைகளைக் கொடுத்தபோதிலும், தனக்குள்ள யாவற்றையும் (குறைவாக இருக்கும்) உண்மையான பலி என்பதை இயேசு வலியுறுத்தினார். (மாற். 38:44)

**பதிமூன்றாம் அதிகாரம்**

ஆலயத்தை விட்டு செல்லும்போது, இயேசுவின் ஒரு சீஷர் மிக பிரமாண்டமாக கட்டப்பட்ட ஆலயத்தின் கலை நுட்பத்தை வியந்தார்கள். (admire) "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இந்தப் பெரிய கட்டடங்களைக் காண்கிறாயே, ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்றார்." (மாற். 13:2) இயேசு இவைகளை சொல்லிய பின் சிறிது நாட்களுக்குள்ளாக ஆலயமும், எருசலேம் பட்டணமும் அழிக்கப்பட்டது. ஆயினும் இயேசு சுவிசேஷ யுகம் முடிவைக் குறித்தும், அவர் மீண்டும் வருவதைக் குறித்தும் மையப்படுத்தி பதிலளித்தார். மேலும், அவருடைய இரண்டாம் பிரசன்னத்திற்கு முன் நடக்கக்கூடிய பல சோதனைகளைக் குறித்தும், பல வஞ்சகங்களைக் குறித்தும் ஒரு விரிவான விளக்கத்தைக் கொடுத்தார். தெய்வீக காரியங்களை நடப்பிப்பதற்கு ஏற்றக்காலம் இராததினால், கிறிஸ்துவின் அடையாளமாக சொல்லப்பட்ட "மகா உபத்திரவ காலமானது" இந்த பூமியின் மேல் உள்ள மனுக்குலத்தை வழிநடத்தும். இந்த பூமியிலுள்ள முழு குடும்பங்களை ஆசீர்வதித்து, மீதியுள்ள ஆட்சியை ஸ்தாபிப்பது கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னத்தின் முக்கிய நோக்கமாகும். அத்திமரமாகிய இஸ்ரயேல் ஜனங்கள் தங்களுடைய சொந்த தாய் நாட்டில் மீண்டும் குடியேறின காரியம் - தேவன் வாக்களித்த இராஜ்யத்தில் நாம் இக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கான ஆதாரமாய் இருக்கிறது. நாம் நிற்கக்கூடிய காலத்தை விவரிக்கும் ஆதாரங்களை விழிப்போடு விசுவாசிகள் எச்சரிப்போடு கவனிக்கக்கூடியவர்களாக இருக்கிறோம். (மாற். 13:3-37)

**பதினான்காம் அதிகாரம்**

இயேசுவின் அபிஷேகம் அவரின் கடைசி இராப்போஜனம், கெத்செமனே அனுபவம், ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக கிறிஸ்து நிற்பது மற்றும் பேதுரு அவரை மறுதலித்த காரியங்கள் போன்ற பல பாத்திரமான சம்பவங்கள் இந்த அதிகாரத்தில் காணப்படுகிறது. குஷ்டரோகியாகிய சீமோனின் வீட்டில் இயேசு மற்றும் அவருடைய சீஷர்கள் தங்கியிருக்கையில் பெயர் சொல்லப்படாத ஒரு ஸ்திரீ (மரியாளாக இருக்கலாம்) விலையுயர்ந்த நளதம் என்னும் தைலத்தை ஆண்டவரின் தலையின் மேல் ஊற்றினாள். அந்த பந்தியில் விருந்தாளியாக இருந்த யூதாஸ் அதை குறித்து முறுமுறுத்தான். (யோவா. 12:3-6) இவர்களின் சிந்தையை அறிந்த இயேசு, அவர்களை கடிந்து கொண்டு, அவரிடத்தில் காணப்பட்ட இரக்கமான செயலைக் குறித்து, அந்த ஸ்திரீயை பாராட்டி வரலாறு முழுவதிலும் இச்சம்பவம் அனைவரின் நினைவிலும் இருக்கும் என்று கூறினார்.

அதற்கு பின், யூதாஸ் பிரதான ஆசாரியரிடம் சென்று, கிறிஸ்துவை காட்டிக் கொடுப்பதற்கு ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். இராப்போஜனம் புசித்த அன்றைய இரவில் யூதாஸ் இயேசுவோடும் மற்ற சீஷர்களோடும் அமர்ந்திருந்தாலும் ஏற்படுத்தின அந்த புதிய உடன்படிக்கைக்கு முன்னதாகவே யூதாஸ் அவ்விடத்தை விட்டு எழுந்து போனான். அந்தந்த போஜனம் நிறைவு பெற்ற பின், இயேசு தம்முடைய விசுவாசமுள்ள சீஷர்களோடு கெத்செமனேக்கு பயணித்து தம்முடைய பிதாவோடு தனிமையில் ஐக்கியப்படுவதற்கு விரும்பினார். அவர் தோட்டத்தில் தனித்திருக்கையில் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை விழித்திருந்து ஜெபிக்கும்படியாக ஆலோசனைக் கூறினார். "சற்று அப்புறம்போய், தரையிலே விழுந்து, அந்த வேளை தம்மைவிட்டு நீங்கிப்போகக்கூடுமானால் அது நீங்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு: அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார். பின்பு அவர்

வந்து, அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக்கண்டு, பேதுருவை நோக்கி: சீமோனே, நித்திரைபண்ணுகிறாயா? ஒரு மணிநேரம் நீ விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்." (மாற். 14:35-38)

இயேசு தம்முடைய தந்தையிடம் ஜெபித்துக் கொண்டிருக்கையில், அவருடைய சீஷர்கள் அயர்ந்து நித்திரை செய்வதை இரண்டு முறை கண்டார். இறுதியாக யூதாஸ் திரளான கூட்டத்தை கெத்செமனே தோட்டத்திற்குள் நடத்தி, ஆண்டவரை பிடிக்கும்படி அவரை முத்தமிட்டு காட்டிக் கொடுத்தார். இந்த முத்தம் காட்டிக் கொடுப்பதற்கு பரிதாபமான ஒரு அடையாளமாக இருந்தது. இயேசு அன்னாவிடம் இழுத்துச் செல்லப்பட்டார். அதற்கு பின் கட்டப்பட்டவராக அன்னாவின் மருமகன் பிரதான ஆசாரியனாகிய காய்பாவிடம் இழுத்துச் செல்லப்பட்டார். (யோவா. 18:12-16; 19-24)

இயேசுவை குற்றவாளி என்று நிரூபிப்பதற்காக, ஆலோசனை சங்கம் சட்டத்திற்குப் புறம்பான கூடுகையை "இரவு நேரங்களில்" நடத்தியது. "ஆலோசனை சங்கம் இரவில் கூடுவது யூதர்களின் பிரமாணத்திற்கு முரண்பாடாக இருந்ததினாலும், அந்த இரவு பஸ்கா புசிக்க வேண்டிய இரவாக இருந்ததினாலும், அது மிகப்பெரிய குற்றமானது. யேகோவா தேவனால் அபிஷேகிக்கப்பட்ட மேசியாவை மரண தீர்ப்பளிப்பதற்கு அனைவரும் பொதுவாக ஒருமித்து கூடிவந்தது, ஒரு தேசத்தின் முக்கியமான கூடுகைகளில் இது இயல்புக்கு முரணானதாக மிகவும் தெளிவாகிறது. (R1809)

இயேசுவுக்கு எதிரான தவறான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது. ஆயினும், தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்படியாக அவர் தம்முடைய வாயை திறவாதிருந்தார். (ஏசா. 53:7) இருந்தபோதிலும், அவரிடம் நேரடியான கேள்விகளை எழுப்பினபோது, இயேசு தம்மை கிறிஸ்து என்று உறுதிபடுத்தினார். அதற்கு பின் அவர் தேவதூஷணம் கூறினதாக குற்றம் சாட்டப்பட்டு மரணதீர்ப்பளிக்கப்பட்டார், அதற்கு பின், அவர் அடிக்கப்பட்டு, துப்பப்பட்டு, அறையப்பட்டார். அதற்கு பின், பிரதான ஆசாரியரின் ஊழியக்காரியாகிய ஒரு பெண் பேதுருவை இயேசுவின் சீஷன் என்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் இந்த அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து பேதுரு மூன்று முறை ஆண்டவரை மறுத்தலித்து, சபித்த பின் சேவல் கூவியது. இயேசு இச்சம்பவத்தை முன்னதாகவே அறிவித்ததினிமித்தம் பேதுரு மிகவும் அழுதார்.

**பதினைந்தாம் அதிகாரம்**

ஆலோசனை சங்கத்தார் காலையில் மீண்டுமாகக் கூடினார்கள் என்று பதினைந்தாம் அதிகாரம் குறிப்பிடுகிறது. இயேசு பிலாத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டார் என்பதையும் அதற்கு பின் ஏரோதுக்கு முன்பதாகவும் மீண்டும் இரண்டு முறை பிலாத்துவிடம் இழுத்து வந்தார்கள் என்பதையும் நாம் மற்ற சுவிசேஷங்களில் வாசிக்கலாம். (யோவா. 18:28-38; லூக். 23:5-11) "பிலாத்து அவரை நோக்கி: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அதற்கு அவர்: நீர் சொல்லுகிறபடிதான் என்றார். பிரதான ஆசாரியர்கள் அவர்மேல் அநேகங் குற்றங்களைச் சாட்டினார்கள். அவரோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து மறுபடியும் அவரை நோக்கி: இதோ, இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, அதற்கு நீ உத்தரவு ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான். இயேசுவோ அப்பொழுதும் உத்தரவு ஒன்றும் சொல்லவில்லை; அதினால் பிலாத்து ஆச்சரியப்பட்டான்." (மாற். 15:2-5)

ரோம ஆளுநரின் வழக்கத்தின்படி பஸ்கா பண்டிகையின் போது, ஒரு யூத கைதியை விடுவிப்பது வழக்கமாக இருந்தது. அத்தருணத்தில் பிலாத்து இயேசுவை விடுதலை செய்வதற்கு அதிகாரம் பெற்றிருந்தார். கூடுதலாக இயேசுவின் மேல் யூதர்கள் தவறாக குற்றம் சாட்டினார்கள் என்பதையும் பிலாத்து நன்கு அறிந்திருந்தார். ஆயினும், யூதமத தலைவர்கள் இயேசுவின் மேல் கொண்ட பொறாமையினால், பரபாசை விடுதலை செய்யவும், இயேசுவை ரோம போர்ச் சேவகர்களிடம் சிலுவையில் அறைவதற்கு ஒப்புக் கொடுக்கும்படிக்கு ஜனங்களை ஏவி விட்டார்கள். இயேசுவை சிலுவையில் அறைவதற்கு முன்னதாக ஜனங்கள் அவரை ஏளனம் செய்து அவமானப்படுத்தினார்கள். மேலும் அவர் மிக கொடூரமாக உபத்திரவத்திற்குள்ளாக்கப்பட்ட அநேக காரியங்களை மாற்கு எழுதவில்லை. ஆனால் தேசத்தின் மேல் மூன்று மணி நேரம் இருள் சூழ்ந்ததையும், இயேசு தம்முடைய மரணத்துக்கு முன் பேசின கடைசி ஏழு வார்த்தைகளையும், ஆலயத்தின் திரைச்சீலை மேல் துவங்கி கீழ் வரைக்கும் கிழிந்ததையும் இயேசுவே உண்மையான தேவனுடைய குமாரன் என்று நூற்றுக்கு அதிபதியின் அறிக்கையையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இறுதியாக ஓய்வு நாள் துவங்குவதற்கு முன்

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும், நிக்கொதேமுவும் இயேசுவின் சரீரத்தை சீலைகளில் சுற்றி புதிதாக வெட்டப்பட்ட கல்லறையில் வைத்தார்கள்.

**பதினாறாம் அதிகாரம்**

இயேசுவே தேவனுடைய குமாரன் என்ற அறிக்கையையும், அவருடைய உயிர்த்தெழுதலும் பதினாறாம் அதிகாரத்தில் காணப்படுகிறது. "ஓய்வுநாளானபின்பு மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், அவருக்குச் சுகந்தவர்க்கமிடும்படி அவைகளை வாங்கிக்கொண்டு. வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்தில் வந்து, கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது; அவர்கள் ஏறிட்டுப்பார்க்கிறபோது, அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள்." (மாற்.16:1-4)

ஆண்டவரிடத்தில் பக்தியுள்ள சீஷிகளாகிய இரண்டு மரியாள்களும், சலோமியும் இயேசுவின் சரீரத்திற்கு சுகந்தவர்க்கமிட்டு, அவரை கனப்படுத்த வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்கள் அங்கு சென்றபோது, கல்லறையில் மூடியிருந்த கல் புரட்டப்பட்டிப்பதைக் கண்டு எவ்வளவு ஆச்சரியப்பட்டிருப்பார்கள்! ஆயினும் இயேசு உயிர்த்தெழுந்தார் என்று வெள்ளை அங்கிகளைத் தரித்திருந்த தூதர்கள் அவர்களுக்குக் கூறினார். மேலும், அவர் இச்செய்தியை மற்ற சீஷர்களிடம் அறிவிக்கும்படி அந்த ஸ்திரீகளிடம் கூறினார். விசேஷமாக உயிர்த்தெழுந்த ஆண்டவர், கலிலேயாவில் பேதுருவையும் மற்ற சீஷர்களையும் சந்திப்பதாகக் கூறினார். மிகுந்த ஆச்சரியத்துடனும், பயத்துடனும் அந்த தூதனுடைய வார்த்தையை நிறைவேற்றும்படியாக, அந்த ஸ்திரீகள் சென்றார்கள். (மாற். 16:5-8)

இந்த அதிகாரத்தில் காணப்படும் மீதியுள்ள வசனங்கள் - "பழங்காலத்து கிரேக்க கைப்பிரதிகளில் காணப்படுகிறதில்லை. ஆயினும் மாற்கு எழுதின சுவிசேஷம் முழுமையற்றதாக இருந்ததை காட்டுகிறது. ஐந்தாம் நூற்றாண்டில் யாரோ ஒருவர் இந்த சுவிசேஷத்தை நிறைவு செய்யும்படி சில வசனங்களை சேர்த்திருக்க வேண்டும். அலெக்ஸ்சான்டரின் (Alexandrine) எழுதிய ஐந்தாம் நூற்றாண்டில் இந்த கடைசி ஐந்து வசனங்கள் காணப்படுகிறது." (R1998)

சில வேதாகம மொழி பெயர்ப்புகளில் கடைசி அதிகாரத்தின் 20-ம் வசனம் வரை காணப்படுகிறது. ஆயினும் இவைகள் மூலப்பிரதிகளில் இல்லை என்பதை நாம் நம்புகிறோம். அதில் குறிப்பிடப்பட்ட சில சம்பவங்கள் மற்ற சுவிசேஷங்களிலும் காணப்படுகிறது. விசுவாசிகள் விஷமுள்ள எந்த பானத்தைக் குடித்தாலும் அவர்களை சேதப்படுத்தாது என்று விசுவாசிகளுக்கு வாக்களிக்கப்பட்ட வாக்குத்தத்தம் வேதாகமம் முழுவதிலும் தவறானது.

இயேசுவை ஊழியத்தின் கடைசி வார முடிவு சம்பவங்களை மாற்கு தம்முடைய சுவிசேஷத்தில் நேர்த்தியாக நமக்கு பத்திரப்படுத்தியிருக்கிறார். அவருடைய வார்த்தைகளை மிகக் கவனத்தோடு வாசித்து மனுக்குலத்திற்காக தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றின நம்முடைய இரட்சகரின் பக்தியையும், விசுவாசத்தையும் நாம் சரியாகப் புரிந்து கொள்ளும் பட்சத்தில் மிகுந்த ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

கேள்விக்குரிய ஒரு பகுதி

# மாற்கு 16:9-20 வசனங்களுக்கான ஆதாரம்



"வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார். அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார்." (மாற். 16:9)

**James Parkinson**

மாற்கு சுவிசேஷத்தின் முடிவை பொறுத்த வரையில் பழமையான கைப்பிரதிகளுக்கும், மொழிபெயர்ப்புகளுக்கும் வேறு பாடுகளுண்டு. ஆயினும் அந்த வேறுபாடுகள் நமக்கு எதை பொருள்படுத்துகிறது?

மாற். 16:9-20 வசனங்களுக்குண்டான விவாதம்; ஏறத்தாழ 1000 கிரேக்க கைப்பிரதிகளில் இவ்வசனங்கள் காணப்படுகிறது...மூன்று பிரதிகளில் மட்டுமே இது காணப்படுகிறதில்லை. பழங்காலத்து மொழிபெயர்ப்புகளும், "சபை பாதரியார்களும்" இவ்வைகளை சேர்த்து எழுதியிருக்கிறார்கள்.

மாற். 169-20; எதிரான விவாதம் - இரண்டு பழமையான சிறந்த கைப்பிரதிகளில் காணப்படுகிறது. (சினியாட்டிக் & வாட்டிகன் 1209, 4-ம் நூற்றாண்டுக்கு மத்தியில்) மாற்கு சுவிசேஷத்தின் முடிவிலுள்ள சகல வசனங்களையும் பழைய அராமிக் கைப்பிரதிகளில் காணப்படாததுபோல் இவைகளிலும் காணப்படுவதில்லை. இரண்டு பழமையான Georgian, 100 அர்மேனியன் கைப்பிரதிகள் மற்றும் Coptic - Sahidic கைப்பிரதிகளிலும் காணப்படுகிறதில்லை. எல்லா வசனங்களும் அவர்கள் அறிந்து சகல கிரேக்க கைப்பிரதிகளில் ஒன்றிலும் காணப்படுவதில்லை என்று யூசிபியஸ் மற்றும் ஜெரோம் கூறுகிறார்.

சில கைப்பிரதிகள் மற்றும் பழமையான மொழிபெயர்ப்புகளில் மிக குறுகிய முடிவுரை காணப்படுகிறது, "பேதுரு மற்றும் அவர்களோடிருந்தவர்களிடம் தங்களுக்கு அறிவிக்கப்பட்டதை சுருக்கமாகக் கூறினார்கள். இவைகளுக்குப் பின் இயேசு தாமே அவர்கள் மூலமாக அழியாத நித்திய இரட்சிப்பைக் குறித்து அறிவிப்புகளை அனுப்பிவைத்தார்." - given by Bruce M. Metzger, A textual Commentary on the Greek New Testment, 2nd Edition, United Bible Socities, 1994.

வசனங்கள் 9 முதல் 20, ஒன்பது கிரேக்க வார்த்தைகளையும், இரண்டு சொற்றொடர்களையும் கண்டிருப்பதாக Metzger குறிப்பிடுகிறார். இவ்வார்த்தைகளும், சொற்றொடர்களும் மாற்கு தம்முடைய சுவிசேஷத்தில் எங்கும் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. "8 மற்றும் 9-லிருந்து 20 வசனங்களுக்கு இடையில் உள்ள தொடர்பு குழப்பமாக இருக்கிறது. எனவே, 9-லிருந்து 20 வசனங்கள் அந்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி என்பதை நம்புவதற்கு கடினமாக உள்ளது. 8-ம் வசனத்தில், ஒரு ஸ்திரியைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. ஆனால், 9-ம் வசனத்தில் மகதலேனா மரியாளைக் குறித்து புதிதாகக் கூறுவதுப்போல அங்கு காணப்படுகிறது. ஆனால் சில வரிகளுக்கு முன் மரியாளை பற்றியும், (15:47; 16:1) மற்ற ஸ்திரீகளை பற்றியும் (1-8) காணப்படுகிறது. இவைகளைக் காணும் பொழுது, 9-லிருந்து 20 வசனங்கள் வரை ஒருவர் சேர்த்திருக்க வேண்டும். மாற்கு சுவிசேஷம் எழுதின விதத்தை நன்கு அறிந்தவர்கள் 8-ம் வசனத்தோடு அந்த அதிகாரம் திடீரென்று நிறுத்தப்பட்டதைக் கண்டு அதை சரியாக முடிப்பதற்காக இந்த வசனங்களை சேர்த்திருக்க வேண்டும்...இப்படியாக, உறுதியான வெளிப்புற ஆதாரங்களோடும், உட்புறத்தில் காணப்படும் கருத்துக்களின் கோர்வையைக் கொண்டும், மாற்கு சுவிசேஷம் 16-ம் அதிகாரம் 8-ம் வசனங்களோடு முடிவு பெறுகிறது என்ற கருத்துக்கு வரலாம்."

The United Bible Sositys, The Greek New Testment, 9-20 வசனங்களை தவிர்த்திருக்கிறது. Tischendors மற்றும் சில முக்கியமான பதிவேடுகள் இவ்வசனங்கள் சேர்க்கப்பட்டவைகள் என்று நம்பிக்கையோடு கோருகிறது.

மாற்கின் சுவிசேஷம் எந்தவித முன்னுரையின்றி துவங்கப்பட்டதுபோல முடிவுரை இல்லாமல் முடிவுபெறுவது சாத்தியமில்லையா?

**முடிவுரை**

மாற்கின் சுவிசேஷம் 16-ம் அதிகாரம் 8-ம் வசனத்தோடு நிறைவு பெறுகிறது.

ஆகவே, மாற்கு 16-ம் அதிகாரம், 16-18 வசனங்கள் நம்புவதற்கு ஏதுவாக எடுத்து கொள்ள படக்கூடாது. "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று." (யோவா. 3:18) பிசாசுகளை துரத்தவும், அந்நிய பாஷைகளில் பேசுவதும் இப்பொழுது அவசியமானதல்ல. மேலும் சர்ப்பங்களைப்பிடித்து, சாவுக்கேதுவான விஷங்களை குடிப்பது கிறிஸ்தவர்களுக்கு ஏற்றதுமல்ல. (மற்றவர்களுக்கும்)

சுவிசேஷத்தின் எழுத்தாளர்

# ஜான் மாற்கு




"தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்." (மாற். 1:1)

**Albert O Hudson**

அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்." (லூக். 8:3) எருசலேமில் மரியாளுக்கு ஒரு வீடு இருந்தது. விசுவாசிகளும், சீஷர்களும் தங்குவதற்கு அந்த வீடு அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. இதை பார்க்கும் பொழுது, அந்த ஸ்திரீ வசதியுள்ளவளாக இருந்திருக்க வேண்டும். மேலும், பர்னபா என்ற ஒரு சகோதரன் அவளுக்கு இருந்தார். தரித்திரர்களுக்கு தன்னுடைய நிலங்களை விற்று அப்போஸ்தலர்களிடம் கொடுத்தவர் இவரே.

மாற்கு எழுதின சுவிசேஷத்தின் விதம் மிகத் தெளிவாகவும் ஜீவனுள்ளதுமாய் இருக்கிறது. ஒரு இளைஞனுடைய கவனிக்கப்பட்ட கருத்துக்கள் மிக விறுவிறுப்பாகவும், சுறுசுறுப்பளிக்கக்கூடிய தாகவும் காணப்படுகிறது. அப்பொழுது ஜான் மாற்கு வயதில் மிகவும் சிறியவராகவும் இருந்திருக்க வேண்டும். அப். 13:5-ம் வசனத்தில் இதை வாசிக்கலாம். "யோவானும் அவர்களுக்கு உதவிக்காரனாயிருந்தான்." பொதுவாக அவர் இரண்டு ஊழியக்காரர்களுக்கு உதவியாக இருந்தார் என்பதை இவ்வசனம் பொருள்படுத்துகிறது. அந்நேரத்தில் - கிட்டத்தட்ட கிபி. 46 - அவர் 25 வயதுள்ளவராக இருந்திருக்கக்கூடும். இதை தொடர்ந்து பார்க்கும்போது, இயேசு வாழ்ந்த நாட்களில் அவர் 14 வயதுள்ளவராக இருந்திருக்க வேண்டும்.

இந்த ஒரு முடிவானது, அவருடைய சுவிசேஷத்தில் மற்றொரு முக்கியமான அம்சத்தை அதிகரிக்கிறது; பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் காணப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது - வயது சென்றவர்கள் பிரமாணங்களில் பரிட்சயம் உள்ளவர்களாக இருப்பதை போல, இயல்பாகவே, ஒரு இளைஞன் இருக்க வாய்ப்பில்லை. இதை சரிகட்டும்படியாக இயேசு பேசின காரியங்களைப் பற்றியும், செய்த காரியங்களைப் பற்றியும், முழு விவரங்களை இவர் எழுதியிருக்கிறார். இயேசு சொல்லிய பல அராமிக் வார்த்தைகளை அவர் மீண்டும் மீண்டும் எழுதி அவர் இயேசுவோடுகூட இருந்ததையும், இயேசு பேசின வார்த்தைகளை கேட்டார் என்பதையும் சாட்சி கொடுத்து வருகிறார்.



அவருடைய சுவிசேஷத்தில் பல இலத்தீன் மூலம் உள்ள வார்த்தைகளைக் காணலாம். அவர் அந்த சுவிசேஷத்தை ரோம பட்டணத்திலிருந்து வழக்கம்போல் எழுதியிருப்பார் என்பது உண்மையாக இருக்கலாம். இப்படியிருக்க, அவர் கிட்டத்தட்ட 40 வயது நிரம்பியவராக இருந்திருக்க வேண்டும். அதற்குள் அவர், அநேக இடங்களுக்கு பிரயாணித்து, இவ்வளவு ஆதாரங்களை சுறுசுறுப்பாக திரட்டி அனுபவப்பூர்வமான அறிவைப் பெற்றார்.

இயேசுவின் காலத்தில் மாற்கு ஒரு பக்தியுள்ள இளைஞனாக இருந்தார் என்பதற்கான ஒரு நியாயமான விளக்கம் புதிய ஏற்பாட்டில் குழப்பமான ஒரு பகுதி - கெத்சமெனேயில் இயேசுவை பிடித்தபோது தன்னுடைய அங்கியை காவலாளர்களிடம் விட்டுச்சென்ற அந்த இளைஞன் மாற்கு. இந்த சம்பவம் மாற்கு சுவிசேஷத்தில் மட்டுமே காணப்படுகிறது. (மாற் 14:51, 52) அந்த சூழ்நிலையில் அப்போஸ்தலர் அனைவரும் விரைந்தோடியதற்கு பின் இச்சம்பவம் நடந்ததே முக்கிய ஆதாரமாகும். அங்கு இயேசு மட்டுமே இழுத்துச்செல்லப்பட்டார். ("வாலிபன்" - மீமியாஸ் - 14-ல் இருந்து 25 வயதுக்கு உட்பட்டவர்கள்) இயேசுவை சிறைபிடித்ததைத் தொடர்ந்து அந்த வாலிபன் ஒரு துப்பட்டியைப் போர்த்துக்கொண்டு நடக்கும் காரியத்தைக் காணும்படி பின்சென்றார். ஆனால், ஆங்கிருந்த போர்சேவகர்கள், அவரை பிடிக்க முயற்சித்தபோது அந்த துப்பட்டியை அவர்கள் கையில் விட்டுவிட்டு நிர்வாணமாக ஓடினார்.

- பவுல் மற்றும் பர்னபாவை சேவித்தார்.
- பர்னபாவோடு சீப்புருவுக்கு திரும்பினார்.
- அலெக்சாந்திரியாவில் சபை ஸ்தாபிக்கப்பட்டது.
- ரோம பட்டணத்தில் பவுலோடு இருந்தார்.
- ரோம பட்டணத்தில் பேதுருவின் வெற்றிகரமான முடிவு.

## அரசியலின் உறுதியற்ற நிலை

"ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்துகொள்ளப் பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்." (மத். 24:21, 22)

ஆறுமாத காலமே ஆயுதபடையில் மந்திரியாக இருந்தவரை கிம் ஜாங்-அன் (Kim Jong-un) என்ற வடக்கு கொரியாவின் இராணுவ தலைவர் இடமாற்றம் செய்தார். வடக்கு பகுதியில் நடந்து கொண்டிருக்கும் சில இடுக்கமான சூழ்நிலையை சீர்செய்வதே இதற்கு காரணம் என்று சிலர் கருதுகின்றனர். இதற்கு முன்பு அந்த நாட்டின் கிழக்கு பகுதியில் செயல்பட்டுக் கொண்டிருந்த இரண்டு பெரும் தொலைவு பாயும் ஏவுகணைகளை அரசாங்கம் அங்கிருந்து வெளியேற்றம் செய்தது. இதுபோன்று, அமைதிபடுத்தும் முயற்சிகள் நடந்து கொண்டிருந்தாலும், இந்த கட்டுரையை எழுதும் நேரத்திலும்கூட ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த அணுமின் சக்தி வாய்ந்த நிமிட்ஸ் (Nimitz) என்ற விமானம் கிழக்கு கொரியாவின் திசையை நோக்கி நங்கூரமிட்டிருக்கிறது.

ஐ. நா. சபையின் நிரந்தர உறுப்பினரும், வடக்கு கொரியாவின் சக்தி வாய்ந்த அண்டை நாடாகிய சீனா, வட கொரியாவின் தலைவர் கிம் ஜாங்-அன் பதவி ஏற்ற பின்பு, வட கொரியாவை நோக்கி அதிக கவனம் செலுத்த ஆரம்பித்தார். சீனாவில், வடகொரியா வைத்திருக்கும் சட்டவிரோதமான வங்கிகளை எல்லாம் சீனா மிகக் கடுமையாக கண்காணித்துக் கொண்டுவருகிறது.

ஐக்கிய நாடுகள் மற்றும் அதனுடன் இராணுவத்தில் நட்பு கொண்டுள்ள மற்ற நாடுகளெல்லாம் கொரியாவை சுற்றி தங்கள் இராணுவத்தை நிறுத்தியுள்ளனர். அமெரிக்காவின் இந்த ஏற்பாடு, என்னதான் கொரியாவை நோக்கியிருந்தாலும், இந்த இராணுவம் நிறுத்தப்பட்டது சீனாவுக்கு ஒரு பெரும் பிரச்சனையாக திகழ்கிறது. ஏனென்றால், அமெரிக்க இராணுவம் சீனாவில் எல்லையை பாதுகாப்பதற்கு ஒரு பெரிய சவாலாய் உள்ளது. 1953-ல் முடிந்த கொரியா போருக்குப் பின்பு சீனா மற்றும் கொரியாவுக்கு இடையே நிலவிய உறவு மிகவும் கீழ்நிலைக்கு சென்றுவிட்டதாக அரசியல் வல்லுநர் சிலர் கருதுகின்றனர்.

### பிற எல்லையில் நிலவும் உறுதியற்ற நிலை

எகிப்தின் அரசியலில் உறுதியற்ற நிலைமை நீடித்தால் எகிப்தின் பொருளாதாரத்தில் எந்தவித முன்னேற்றமும் காண இயலாது என்று உள்நாட்டு வல்லுநர் சிலர் கருதுகின்றனர் (ஹாம்டி, அப்தெல் ஹசிம் Hamdi, Abdel-Azim) என்ற பொருளாதார வல்லுநர் - "எகிப்தின் பொருளாதார நிலை அரசியலுடன் மிக வலுவாக கட்டப்பட்டுள்ளது" என்று கூறுகிறார். சென்ற வருடம் எகிப்தின் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற மோர்சி (Morsi) என்பவர், அவருக்கு முன் இருந்த ஜனாதிபதியாகிய ஹாஸ்னி முபாரக் (Hosni Mubarak) இடமிருந்து பல நீண்டகால பொருளாதார சவால்களைப் பெற்றுள்ளார்.

வறுமையின் உச்சகட்ட நிலை, வேலையில்லா திண்டாட்டம், சமுதாய சீர்த்திருத்தலின் வீழ்ச்சி, வரவு செலவு திட்டத்தில் வீழ்ச்சி, வெளிநாட்டு கடன், ஏழை பணக்காரருக்கிடையே நடந்து கொண்டிருக்கும் ஏற்றத்தாழ்வுகள் போன்ற பல போரட்டங்களை முப்பது ஆண்டாக ஆட்சி புரிந்துவந்த முபாரக் (Mubarak) அரசு, தீர்க்க முடியாமல் தோல்வியுற்றது. எகிப்தியரின் பவுண்ட் (Pound) டாலரைக் (Dollar)காட்டிலும் மதிப்பில் மிகவும் குறைந்துவிட்டது. அயல்நாட்டுக் கடனும் 187 பில்லியன் டாலராக (US Dollar) உயர்ந்துள்ளது. பல தொழில் நிறுவனங்கள்

மூடப்பட்டதால், வேலையில்லா திண்டாட்டம் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகிறது என்று வல்லுநர் கூறுகின்றனர். அயல்நாட்டு பொருளாதாரத்தை அதிகரித்து வந்த சுற்றுலா துறையும்கூட அரசியலின் உறுதியற்ற நிலையினால் மிகவும் பாதிப்படைந்துள்ளது.

**அரசியலின் உறுதியற்ற நிலையின் படிநிலை (2009-2010)**

**அதிகமாக பாதிக்கப்பட்டவை குறைவாக பாதிக்கப்பட்டவை**

8.8 சிம்பாப்வே8.5 சாட்8.2 காங்கோ கின்ஷாசா8.0 கம்போடியா8.0 சூடான்7.9 ஈராக்7.8 ஆப்கானிஸ்தான்7.8 ஆப்ரிக்கா7.8 ஐவரி கோஸ்டு7.8 ஹெய்தி7.8 பாக்கிஸ்தான்7.8 சாம்பியா 3.6 நியூசிலாந்து3.6 லக்சம்பர்க்3.6 ஆஸ்திரியா3.6 ஆஸ்திரேலியா3.5 மொரீஷியஸ்3.5 காஸ்டா ரிக்கா3.4 சுவிச்சர்லாந்3.2 சுவீடன்3.2 பின்லாந்2.8 கனடா2.2 டென்மார்க்1.2 நார்வே வேறு இடமான சிம்பாப்வேயில் (Zimbabwe) பொருளாதாரம் மற்றும் அரசியலின் உறுதியற்ற நிலையால் உணவு தயாரிப்பு அழிந்து கொண்டு இருக்கிறது. பல ஆண்டுகளாக உண்டான வறட்சியினாலும், வெள்ளத்தினாலும், குறைந்த அறுவடை காணப்படுகிறது. வேலையில்லா திண்டாட்டத்தினால் பல மோசமான விளைவுகள் நிகழ்ந்துள்ளது. 2012 சிம்பாப்வேயின் வறட்சி ஆய்வு அமைப்பு ஒன்று, 2013-ல், 1.6 மில்லியன் மக்கள் போதிய உணவு இல்லாத காரணத்தினால் உச்சக்கட்ட பசியால் பாதிக்கப்படுவார்கள் என்று கூறுகிறது. மூன்று ஆண்டுகளில் இதுவே மிக உயர்ந்த நிலையில் உள்ள உணவு பற்றாக்குறை உள்ள ஆண்டாக திகழும். 2012-ல் நடத்திய ஆய்வில், 11% சிம்பாப்வே மக்கள் மட்டுமே நிரந்திர வேலையில் இருந்தனர். பலருக்கு சம்பளம் என்று எதுவும் கிடைக்கவில்லை. உயிர்வாழ போராடிக்கொண்டு இருக்கின்றனர்.

அமெரிக்க அரசாங்கத்தைச் சார்ந்த ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று அரசியல் முரண்பாடுகளால் மாநிலங்கள் எவ்வாறு தோல்வி அடைந்துள்ளது என்பதற்கு பல ஆதாரங்கள் வைத்துள்ளன. 1994 துவங்கிய இந்த ஆராய்ச்சி நிறுவனம், உறுதியற்ற மற்றும் உறுதியான பல நாடுகளை ஒப்பிட்டுப்பார்த்து 100 பிரச்சனைகளை கண்டுபிடித்துள்ளது. 1955 முதல் 1995 வரை நடந்த பலவிதமான போர்கள், ஆட்சி மாற்றங்கள், உறுதியற்ற அரசியல்கள் போன்றவைகளே.

அந்த அமைப்பானது அரசியலின் உறுதியற்ற நிலைக்கான காரணங்களைக் கொண்ட அட்டவணை ஒன்றை தயாரித்து, சமுதாய கண்டனங்களால், அரசாங்கம் சந்திக்கப்போகும் அச்சுறுத்தல்களைக் குறிப்பிடுகிறது. மேலும், அந்த அட்டவணை கூறுவது, "வரப்போகும் பொருளாதார இடறலினால் பல கட்டுக்கடங்காத சம்பவங்கள் நிகழும்." அண்மையில் கிடைத்த தகவலின்படி 165 நாடுகளில் 19 நாடுகள் மிக ஆபத்தான ஒரு நிலையில் உள்ளன. 70 நாடுகள் ஒரு உறுதியற்ற நிலையை உணர்ந்திருக்கிறது. (அதில் சிம்பாப்வே முதன்மையான இடத்தை பிடித்திருந்தது). 165 நாடுகளில், 17 நாடுகள் மட்டும் குறைந்த ஆபத்தான நிலையில் உள்ளது. 2007 முதல் முன்னிலையில் வகித்துவரும் 50 நாடுகளில் 47 நாடுகள், மிக ஆபத்தான நிலையில் உள்ளது.

**யேகோவா தேவன் உறுதியுள்ள ஒரு நிலையை கொண்டுவரப் போகிறார்**

உலகில் வளர்ந்து கொண்டிருக்கும் இந்த உறுதியற்ற நிலையைப் பார்த்து, வேத மாணவர்கள் ஆச்சரியம் அடைய வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், "...மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்" (தானி. 12:1) என்று தானியேல் கூறுகிறார்.

மிகுந்த ஆபத்துகளையும், இடற்பாடுகளையும் குறித்து இந்த வேதபகுதி விவரிக்கிறது. இந்நாளில் பூமியின் ஜனத்தொகை முழுவதையும் அழிக்க, வல்லமையுள்ள அணு ஆயுதங்கள் பல உள்ளன. இத்தருணத்தில் நாம் எதை கண்ணோக்குவோம் என்று கிறிஸ்து கூறுகிறார், "வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்." (லூக். 21:26)

இந்த அச்சுறுத்தும் நாட்கள் ஒரு நல்ல நிலைக்கு நாம் கடந்து செல்ல நிகழ்கிறது என்று வேதம் குறிப்பிடுகிறது. உலகம் முழுவதற்கும் அடையாளமாக எகிப்து தேசம் ஒப்பிடப்படுகிறது - "கர்த்தர் எகிப்தியரை வாதையினால் அடிப்பார்; அடித்துக் குணமாக்குவார்; அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்புவார்கள்; அப்பொழுது அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார்" (ஏசா. 19:22) என்று ஏசாயா கூறுகிறார். இப்பொழுது நடக்கும் நிகழ்வுகளை எல்லாம் ஒரு இருட்டான இரவாக எண்ணி - "அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." (சங். 30:5)சங்கீதக்காரர் கூறுகிறார். மேலும் நமக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் "நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்" (சங். 90:3) என்று கூறப்பட்டுள்ளது.

### எல்லாம் நிறைவேறித் தீருதல்

"மனுபுத்திரரே, திரும்புங்கள்" என்ற நிறைவேறும் தேவனுடைய வாக்கியமானது எருசலேம் ஆலயத்தில் அப்போஸ்தலனாகிய பேதுருவின் பிரசங்கத்தின் உட்கருத்தாக இருந்தது. அவர் நமக்காக வைத்திருக்கும் வாக்குத்தத்தமெல்லாம் அப்போ. 3:20, 21-ல் "உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக்குணப்படுங்கள். உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

தேவனுடைய இராஜ்யம் பூமியின் மேல் எவ்வாறு ஸ்தாபிக்கப்படும் என்ற ஒரு அற்புதமான தொகுப்பை, வெளி. 21:4, 5-ம் வசனத்தில் காணலாம் - "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்." தேவனுடைய நாள் ஒரு உறுதியான நிலையை உருவாக்கும். அந்த உறுதியான நிலை எல்லா மனிதருக்கும் மகிழ்ச்சியும் ஆறுதலும் கொடுக்கக்கூடியதாய் இருக்கும். இப்போதிருக்கும் உலகைவிட இன்னும் சிறந்த உலகை உருவாக்கும்!


**சங்கிலியாண்டபுரம் வேத மாணவர்கள்,**

**திருச்சி.**

**Cell : 9244611241, 8122224919**